முரசொலி

வார இதழ் — மு. கருணாநிதி

முரசு 3 | 3-8-56 | வெள்ளி | ஒலி 17

தேஷ்முக்கின் படப்பிடிப்பு!

ஜனநாயக நங்கை துடிக்கத் துடிக்க சர்வாதிகாரக் கட்டாரியை அவள்மீது பாய்ச்சி விட்டார், இந்த உபகண்டத்தின் பிரதமர் பண்டித நேரு!

மராட்டிய மண்டலத்துத் தோழர்கள் அலறிப் புடைக்க ஜனநாயக நங்கை, பொங்கும் குருதியைத் துடைத்தபடி தேசியக் கூடாரத்தைவிட்டு வெளியே துரத்தப்பட்டிருக்கிறாள்!

அந்தக் கோரக் காட்சியை சென்ற வாரம் பாராளுமன்றத்திலே படம்பிடித்துக் காட்டினார் பதவி துறந்த நிதி அமைச்சர் தேஷ்முக்!

பெரும்பான்மை மராட்டிய மக்களது ஒருமித்த எண்ணத்தைப் புறக்கணிக்கும் வகையிலே பம்பாய் நகரை மத்திய அரசாங்கத்தின் நேரடி ஆட்சிக்குக் கீழ் கொண்டு வந்தது—

1955-ம் ஆண்டு நவம்பரிலும், 1956-ம் ஆண்டு ஜனவரியிலும் பம்பாய் போலீசார் முகாந்திரமன்னியில் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியிருந்தும் கூட இன்றுவரை அது குறித்து எந்தவித விசாரணையும் செய்யப்படாதது—

மாநிலப் புது அமைப்பு மசோதா பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு வந்திருக்கும் கட்டத்தில்—ஆலோசனைகளுக்காக பரிசீலனைக் குழுவிடம் ஒப்புவிக்கப் பட்டிருக்கும் சூழ்நிலையில் அவைகளைப் பாதிக்கும் விதத்தில் மந்திரி சபையைக் கலக்காமல் பம்பாயின் வருங்காலம் குறித்து முன்னதாகவே அறிக்கை வெளியிட்டது—

இந்த மூன்று குற்றச் சாட்டுகளின் மூலம் நேருவை ஜனநாயகத்தைக் கொல்வதற்கு முயன்ற கொலைகாரராக நிரூபித்து விட்டார், தேஷ்முக்!

நல்ல திறமையான நிதியமைச்சர்; அவரே வாதியாக இருக்கிறார்! இந்நாட்டின் முற்போக்கு இயக்கங்கள் அத்தனையும் சாட்சிக் கூண்டிலே நின்று ஒரு மனதாகச் சுட்டிக் காட்டுகின்றன—நேரு ஜனநாயகத்தைக் கூறுபோட முயன்றவர்; மராட்டியர் எண்ணங்களை மண்ணுக்குச் சமானமாய் நினைத்தவர்; —என்று!

இந்தக் 'கொலை வழக்கு' இன்று மக்கள் மன்றத்தின் முன்னே வந்திருக்கிறது. வாதி, சாட்சிகள் — தயாராயிருக்கின்றனர்! பொதுமக்களே! நீங்கள் வழக்கைத் தீர விசாரித்து, வருகிற பொதுத் தேர்தலிலே, 'கொலைகாரருக்'கும், 'கொலை' செய்ய உடந்தையாயிருந்த குழுவினருக்கும் சரியான 'தண்டனை' வழங்க வேண்டும்!

ஆசியாவின் ஜோதி - இங்கல்ல; எகிப்து நாட்டில்!

ஹிட்லருடைய நாஜிப் படை ஐரோப்பாவை விழுங்க ஆரம்பித்தபோது இருந்த அதிர்ச்சி—

ஜப்பானியரது போர் விமானங்கள் 'பேர்ல்' துறைமுகத்திலே வெடி குண்டுகளை வீசிய போது நிலவிய ஆரவாரம்—

இவை அத்தனையும் சூயஸ் கால்வாயை எகிப்து நாடு மேற்கொண்ட இந்த நேரத்திலே ஏற்பட்டிருக்கிறது.

டாலரைக் கொட்டி உலகத்தை விலைபேசி விடலாம்—என்று கனவு கண்ட அமெரிக்காவின் குலை நடுங்குகிறது!

ஏகாதிபத்ய சரசத்தால்; எத்து வேலைகளடங்கிய சாகசத்தால் விடுதலை வேட்கையை சாகடித்து விடலாம்—என மனப்பால் குடித்திருந்த பிரிட்டன்—தேள் கொட்டப் பெற்ற திருடனைப் போல திக்கு முக்காடுகிறது.

இந்த இரு நாடுகளுக்கும் பக்கமேளம் கொட்டுவதாலேயே ஆசியாவில் விரித்திருக்கும் வலையைக் காப்பாற்றிக் கொள்ளலாம்—என ஆசை கொண்ட பிரான்ஸ்கூட இன்று துக்கத்திலாழ்ந்து விட்டது!

இவைகளை யெல்லாம் விட, பிரிட்டனின் நிலைதான் பீதி நிறைந்ததாகவும், கவலை கப்பியதாகவும் தோற்றமளிக்கிறது.

பிள்ளையைப் பறி கொடுத்த தாய்!

கணவனைப் பறி கொடுத்த மனைவி!

—இவர்களுக்கு எந்த விதத்திலும் தாழ்ந்ததல்ல சூயஸ் கால்வாயைப் பறி கொடுத்த பிரிட்டன்!

உண்மையில் பார்க்கப் போனால், பிரிட்டன் பெற்ற குழந்தையை இழந்துவிடவில்லை; தாலி கட்டிய கணவனைப் பறி கொடுத்து விடவில்லை!

யார் பெற்ற குழந்தைக்கோ உரிமைகொண்டாடியது பிரிட்டன்; இப்போது உரியவர்கள் குழந்தையை எடுத்துச் சென்று விட்டார்கள்; அதனால் அலறுகிறாள்—போலி வேஷமிட்டு பாதம் தேயாமல் வாழ்விலேயே பிரியம் கொண்ட ஆங்கிலத் தாய்!

எகிப்து நாட்டுக்குச் சொந்தமாம் சூயஸ் என்னும் காதலனைக் கட்டிலறையில் வீழ்த்தியிருந்தாள், அவள். இப்போது அந்த ஏறு நடைக்காரி எகிப்து கணவனை அழைத்துச் சென்று விட்டாள். அதனால் அழுகிறாள்; அலறுகிறாள்; அங்கலாய்க்கிறாள்; அருமை மிகு கணவன் போய்விட்டானே—என்று ஆவேசப் பெருங் கூச்சல் எழுப்புகிறாள், கட்டிலறை இன்பம் தரும்போதே கழுத்தைப் பிடித்து நெறித்து விடும் காரியத்தில் பெயர் பெற்ற ஆங்கிலப் பெண்ணாள்!

சூயஸ் கால்வாய்—ஆசிய நீர்ப்பாதையின் மூல நரம்பு! கீழ்க் கோடிக்குப் போக நாலாயிரம் மைல்கள் சுற்றி வளைந்து செல்ல வேண்டியதை இந்தக் கால்வாய் மீதப்படுத்துகிறது. கிழக்கையும் மேற்கையும் இணைக்கும் குறுக்குப் பாதை இந்தக் கால்வாய்!

இந்தக் கால்வாயின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுவந்த கம்பெனியை தேசிய மயமாக்கி விட்டார், எகிப்தின் தலைவர், நாசர்!

ஏகாதிபத்தியத்துக்கு நாசகாலர்—எகிப்தியருக்கு நல்லவர்—இந்த நாசர்!

ஏன்; வெறும் ஆதிக்க உணர்ச்சியாலா? மேலை நாடுகளை மிரட்ட வேண்டும், ஆட்டிப் படைக்க வேண்டுமென்ற விபரீத ஆசையாலா? அல்ல; அல்ல.

பசிகாரன்; பல நாட்கள் சிறுகுடலை வேலையில்லாத் திண்டாட்டத்தில் அமிழ்த்தியவன்; சாகப்போகும் நிலையிலே குன்று போலக் குவிந்திருக்கும் சோற்று மலைக்குச் சொந்தக்காரனைப் பார்த்து உதவி கேட்கிறான். அந்தப் பேராசைக்காரனோ மறுத்து விடுகிறான்.

அந்தப் பசிகாரனுக்குத் தெரியும்—குவிந்திருக்கும் வெள்ளை அன்னத்தைச் சமைப்பதற்குச் சிந்திய இரத்தம் அவனது உறவினர்களுடையது என்று! உழுதவன்; விதைத்தவன்; அறுத்தவன்; நிலத்துக்கு உடையவன் அதன் சொந்தக்காரன். அவனா பட்டினியால் சாவது?

எனவேதான் ஒரு நாள் மனம் துணிந்து உரிமைப் பட்டயத்தை எழுதித் தொங்க விடுகிறான்; 'இது எனக்குரிய அன்னம்; உனக்கு வேண்டுமானால் அதை வெளியே நின்று கேள்; தருகிறேன்—,என்று!

இதே கதைதான் எகிப்து நாட்டிலும் நடைபெற்றிருக்கிறது.

சூயஸ் கால்வாய் ஓடும் மண் எகிப்து நாட்டு மண். எண்பத்தி ஆறு ஆண்டுகளுக்கு முன்பு அந்தக் கால்வாயைத் தோண்டுவதற்குச் சிந்தப்பட்ட வியர்வைத் துளிகள் ஒவ்வொன்றும் எகிப்தியனுடையது!

அதுமட்டுமா? கால்வாயைக் கட்டி முடிப்பதற்கான பதினைந்து ஆண்டுகளில் மட்டும் கடலில் விழுந்து, காயம்பட்டு, மண்ணில் புதையுண்டு உயிர் துறந்த எகிப்து நாட்டுக்காரர்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? ஒன்றல்ல; இரண்டல்ல—ஒரு லட்சத்து இருபதினாயிரம்!

ஆமாம்; ஒரு லட்சத்து இருபதினாயிரம் பேர் ஏகாதிபத்யக் காவலர்க்குப் பயன்படும்—என்றஒரே காரணத்துக்காகத் தோண்டப்பட்ட கால்வாயில் உயிர் விட்டனர்!

சுரண்டல் பாதையைச் சுருக்கி அமைக்கும் பொறுப்பைத் தலைமேல் தாங்கி, அதற்காகத் தலையை அறுத்துக் கொடுத்தவர்கள் ஒரு லட்சத்து இருபதினாயிரம் பேர்!

நீர் ஓடுவதற்கு முன் அதிலே இரத்தத்தை ஓட விட்டார்கள், எகிப்தியர்கள்!

அவர்கள்தான் பசியால் அலறினார்கள். அதைப் போக்குவதற்குத்தான் அஸ்வான் பிரதேசத்தில் நைல் நதியை மடக்கி அணைபோட நினைத்தார் நாசர்!

அந்த நீர்த்தேக்கம் கட்டி முடிக்கப்பட்டால் ஜன நெருக்கம் மிகுந்த எகிப்து நாட்டு டெல்டாப் பிரதேசத்திலே புது வாழ்வு பிறக்கும்! மக்கள் புரட்சியின் பலனை அனுபவிப்பர்!

ஆனால் திட்டத்தை அமுல் நடத்தவோ பணமில்லை, நாசரிடம்! எனவே அமெரிக்காவிடம் கடன் கேட்டார்; பிரிட்டனிடம் கை விரித்தார்; உலக பாங்கியிடம் கெஞ்சினார்—நிதி தாருங்கள் என்று!

நாசர் மீது சந்தேகக் கண் வைத்திருப்பவர்கள், மேலை நாட்டுக் காரர்கள்.

காரணம் சூயஸ் கால்வாயில் காவலிருந்த ஆங்கிலச் சிப்பாய்களை விரட்டி யடித்தார்—என்பது மட்டுமல்ல; அவர் கம்யூனிஸ்ட்டு நாடுகளிடமிருந்து ஆயுதங்கள் வரவழைத்துக் கொண்டார்—

அமெரிக்காவின் கைப்பாவையாக இருக்க சம்மதம் தர மறுத்தார்!

அரபு நாடுகளை யெல்லாம் ஒன்று சேர்த்து, அவைகளிடையே ஒரு 'சகோதர' அமைப்பை ஏற்படுத்தக் கருதினார்!

—இதுதான் அவர் செய்த குற்றங்கள்! ஆமாம்; அமெரிக்காவின் செல்லப்பிள்ளையாக மறுத்தார், நாசர்!

அதன் விளைவாக அஸ்வான் அணையைக்கட்டி முடிப்பதற்கு கடன் கொடுக்க மறுத்து விட்டது, அமெரிக்கா! அது கண் ஜாடை காட்டியதுதான் தாமதம்; பிரிட்டனும் உதவி புரிய மறுத்துவிட்டது!

ஐக்ய நாடுகள் சபையின் சார்பிலே இயங்கிவரும் உலக பாங்கிகூட 'இல்லை'யென சொல்வதற்குண்டான போக்குகளையும் காட்டிவிட்டது.

எல்லா நாடுகளையும் ஒரே மனோபாவத்தில் பார்க்கவேண்டிய பாங்கி—தேவைப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக மட்

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

சென்னை 3-8-56 வெள்ளி

'மேலானவருக்கு'!

பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த ஹோசியார்பூரிலே கொடுமைக்குப் பெயர் பெற்ற வெலிங்டனும், டயர் சகோதரர்களும் வெட்கப்படுகிற அளவுக்கு காங்கிரஸ் அரசாங்கத்தின் காவலராம் போலீசார் நிராயுத பாணிகளின் கூட்டத்தில் தடியடிப் பிரயோகம் செய்திருக்கின்றனர்— என்பது இப்போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

நாட்டு மக்கள் காரி உமிழ்கிற அளவுக்கு கயமைத் தன்மையும், காட்டுமிராண்டித்தனமும் பெற்ற கொள்கையை பஞ்சாபின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் தேசியத்தார் கடைப்பிடிக்கின்றனர் — என்பதற்கு மேலும் ஒரு சான்றுபோல் வந்திருக்கிறது, சீமன் நாராயண் குழுவினர் வெளியிட்டிருக்கும் அறிக்கை!

அவசியத்திற்கு அப்பாற்பட்ட பலாத்காரம் தடியடிப் பிரயோகத்தில் பயன்படுத்தப்பட்டது!

கூட்டத்தைக் கலைப்பதுதான் நோக்கமென்றாலும், கூடியிருந்தவர்கள் ஓடியபோதும் அவர்கள் துரத்தப்பட்டு தாக்கப்பட்டிருக்கின்றனர்!

தடியடிகளினால் பாதிக்கப்பட்டவர்கள் வயது வந்த ஆண்கள் மட்டுமல்ல — பெண்டிரும், சிறுரும்கூட சித்ரவதைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றனர்!

பெண்களின் பின்னலையும், அவர்கள் அணிந்திருக்கும் சேலையையும் போலீசார் பற்றி யிழுத்திருக்கின்றனர்!

அதன் விளைவாக அவர்களுடைய சேலைகள் கிழிக்கப்பட்டிருக்கின்றன!

துப்பாக்கியின் அடிக் கட்டையால்கூட அவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள்!

ஊர்வலத்திலிருந்து கலைந்து ஓடி பக்கத்திலுள்ள வீடுகளில் ஒளிந்துகொண்டவர்களையும் பழி வாங்கும் நினைப்பில் துரத்திச் சென்று அவர்களை இழுத்துப் போட்டு போலீசார் நையப் புடைத்திருக்கின்றனர்.

— பொது மக்களின் பலத்த போராட்டத்திற்குப் பிறகு நடைபெற்ற விசாரணைக் கமிட்டியின் கண்டுபிடிப்புகள் மேலே யிருப்பவை!

மனித இருதயத்தை எடுத்தெறிந்துவிட்ட காட்டுமிராண்டிகளை போலீஸ்காரர்களாக்கி வைத்திருக்கிறது, இந்த அகிம்சாவாதிகளின் அரசாங்கம்!

மனித சமுதாயத்தின் கண்களென்பார்கள் பெண்களை; அந்தக் கண்களில்தான் கொள்ளிக் கட்டையைச் சொருகியிருக்கிறார்கள்!

பிள்ளைக் கனியமுதாம், பேசும் பொற் சித்திரங்கள்! — அந்தச் சித்திரங்களைக் கசக்கி யெறிந்து சின்னாபின்னப்படுத்தி யிருக்கின்றனர்!

முதல் நாள் நடைபெற்ற ஊர்வலத்தின்போது சில பெண்கள் போலீசாரைத் தூற்றினார்களாம் — அதற்காகத்தான் மலர் முகவதிகளின் மீது மந்திகளை ஏவிவிட்டிருக்கிறது, பஞ்சாப் அரசாங்கம்!

வெள்ளைத் துரைத்தனம் செய்தறியாத அநீதி — உலக அரசியல் வரலாற்றில் எந்த நாகரிக அரசும் மனத்தால் நினைப்பதற்குக்கூட நடுங்கிய கொடுமை — மகளிர் மீது தாக்குதல் நடத்துவது!

அதைத்தான் நெஞ்சில் சிறிதளவும் நடுக்கமின்றி நடத்திக் காட்டியிருக்கிறது, தேசிய வீரர்கள் கோட்டம்!

வெள்ளையன்கூட சிறிது தயங்கியிருப்பான் — காரணம், சுரண்ட வந்த பூமியில் இல்லாவிட்டாலும் சொந்த நாட்டிலாவது உண்மை ஜனநாயகத்தை வைத்துக் கொண்டிருப்பவன் அவன்!

இங்கோ சொந்த செல்வாக்கை வைத்து சர்வாதிகாரமல்லவோ நடத்துவதற்கு முயல்கிறார், நாடாள வந்திருக்கும் பண்டிதர்!

சென்ற கிழமை பாராளுமன்றத்தில் தேஷ்முக் சாட்டிய குற்றச்சாட்டுகளுக்கு பதிலிறுக்கும் வகையில் பண்டிதர் பேசினார்:

"நான் நாட்டின் பிரதமர் என்பதையும்விடக் கூடுதலானவன்" என்று!

பண்டித நேரு இந்தியாவின் பிரதமர் மட்டுமல்லவாம் — அதனிலும் மேம்பட்டவராம்!

இருக்கலாம்; தோழியர் இந்திரா காந்தியாருக்கு! அவருடைய சோதரியார் விஜயலட்சுமியாருக்கு! மற்றும் அவருடைய உறவினர்களுக்கு!

காங்கிரஸ் கட்சித் தோழர்களுக்கு உண்மையில் அவர் பிரதமரினும் மேம்பட்டவர்தான்; அவர்களுக்கெல்லாம் உயிர் கொடுத்து, வாடிய பயிர் போலிருக்கும் கட்சிக்கு நீர் கொடுக்கும் மேதையாகக் கூட இருக்கலாம்!

ஆனால் இந்த உபகண்டத்து மக்கள் அனைவரும் அவரது உறவினர்கள் அல்லவே! அவர்கள் அத்தனை பேரும் காந்தியின் வழியில் செல்லும் காங்கிரஸ்காரர்களென்பது விவேகத்துக்குக் கட்டுப்பட்டு வராதே!

— இது தெரியாமல் சர்வாதிகார சப்ரமஞ்சக் கூடத்திலே சரசமாடும் வெறியர்களின் நிலையிலேயிருந்து பண்டித சிரோன்மணி பேசியிருக்கிறார்! அந்தப் பேச்சின் பிரதிபலிப்புதான் ஹோசியார்பூரிலே, மற்றும் இந்த உபகண்டத்தின் பல இடங்களிலே, தடியடிகளாய், கண்ணீர்ப் புகை குண்டுகளாய், துப்பாக்கி வேட்டுகளாய் பொது மக்களைப் பீதியிலாழ்த்திக் கொண்டிருக்கின்றன.

சர்வாதிகாரம் எந்த ரூபத்திலும் வெற்றிபெற்றதில்லை. அசோகச் சக்கரத்துக்குப் பதில் நாஜிச் சின்னத்தை மூவர்ணக் கொடியிலே பதிப்பதற்கு முயலும் இந்தக் 'குட்டி இட்லர்கள்' இதை உணர்ந்து கொள்ளட்டும்!

★

அவர்கள் போராட்டம்!

ஓடும் புகை வண்டிகளோடு ஓடியும், அலுவலகத்தில் இருந்தும் பணி புரிந்துவரும் ஆர். எம். எஸ். ஊழியர்கள் இந்த நாட்டு தபால் இலாக்காவின் அச்சாணி போன்றவர்கள்!

அவர்கள் சிறிது அயர்ந்தால் திருவாரூர் போக வேண்டிய கடிதம் திருவையாறு போய்விடும்; ஆரூர் போக வேண்டிய கடிதம் கரூரில் தங்கிவிடும்! — அவ்வளவு எச்சரிக்கையுடனும், பொறுப்புணர்ச்சியுடனும் நடக்கவேண்டியவர்கள் அந்தத் தோழர்கள்!

அவர்களுக்கு இந்த அரசாங்கம் தரும் ஊதியமோ நாமறிந்ததுதான் — இந்த நிலையில் டெல்லித் தலைமைத் தபால் நிலைய அதிகாரியோ புதிய உத்தரவொன்றை வெளியிட்டு சென்னை ஊழியர்களின் உரிமைக்கு உலைவைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்!

மீனம்பாக்கம் விமான நிலைய அஞ்சல் பிரிக்கும் அலுவலகத்தில் பணி புரியும் ஆர். எம். எஸ். ஊழியர்கள், இனிமேல் தங்களுடைய சொந்த செலவிலேயே பூங்கா நகரில் இருக்கும் தலைமை நிலையத்திற்குச் செல்வதோடு அங்கிருந்து மீனம்பாக்கத்திற்கும் செல்ல வேண்டுமாம்! இவ்வளவு அலுவலகப் பணியையும் அவர்கள் கைச் செலவிலேயே செய்து கொள்ள வேண்டுமாம்!

அதற்காக இதுநாள் வரை வழங்கப்பட்ட ரெயில்வே 'பாஸ்'கள் ரத்து செய்யப்பட்டுவிட்டனவாம்!

ஆர். எம். எஸ். ஊழியர்களின் சம்பளத் தொகையில் கைவைக்கும் இந்த விபரீதப் போக்கை எதிர்க்குமுகத்தான் அறப் போர்க் கொடியை உயர்த்தியிருக்கிறார்கள், அவர்கள்.

வழக்கமாக வாங்குவதைப்போல 1—7—56-லும் 1—8—56-லும் அவர்கள் சம்பளத் தொகையை வாங்க மறுத்திருக்கின்றனர்!

சென்னை ஆர். எம். எஸ். ஊழியர்களின் உரிமைப் போர் வாகை சூட; மீண்டும் என்றும் உள்ளதைப்போல அவர்கள் வழிச் செலவு சலுகை பெற நாமும் வாழ்த்துகிறோம்! பொது மக்களின் ஆதரவு அவர்கள் பக்கம் உண்டு — என உறுதி கூறுகிறோம்!



அன்புள்ள
பொன்முடி!

விடிந்தால் திருமணம். வீடு, வாசல், தெருவெல்லாம் விழாக்கோலம் கொண்டிருக்கிறது. திருவாடுதுறையின் நாதசுர இசைத்தட்டுக்களை ஒலி பெருக்கிகள் முழங்கிக் கொண்டிருக்கின்றன. வாழை, மா, பலா, இன்னோரன்ன கனி வகைகள் பந்தலிலே தொங்குகின்றன. விருந்தினர்கள், வரவேண்டியவர்கள் எல்லாம் வந்து விட்டனர். நண்பர் குழாம் குவிந்துகிடக்கிறது. கதிரோதயத்தை எதிர்பார்த்து வாழ்வோதயத்தின் வாயிற்படியில் நிற்கும் வாலிப உள்ளங்கள் இரண்டு துடித்துக் கொண்டிருக்கின்றன.

என்ன யோசிக்கிறாய் நண்பா! யாருக்குத் திருமணம் — ஒருவேளை என் மருமகன் மாறனுக்கோ என்று தானே; அவன் தான் ஆண்டு ஒன்று போகட்டும் என்கிறானே—அப்படியே இருந்தாலும் உனக்கு அழைப்பு அனுப்பாமல் திருமண நிகழ்ச்சியின் சிறப்பை மட்டுமா விளக்கிக் கொண்டிருப்பேன்! அவனுக்கு மல்ல; சகோதரர் சத்திக்கு மல்ல, இப்போது திருமணம்! யாரோ ஒரு மணமகனுக்கும் மணமகளுக்கும் என்று வைத்துக் கொள்வோம். திருமண விழாவின் எழிற் கோலத்தை—எதிர்த்த வீட்டுக்காரியால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அடுத்த வீடு வாழ்வது அவளுக்கு அறவே பிடிக்காது! எப்படியாவது திருமணம் நடக்காமல் போய்விட வேண்டும் என்று எண்ணமிட்டாள். அதற்காக பெரும் ஆலோசனை நடத்தித் தக்கதோர் முடிவும் செய்தாள். இரவு பள்ளியறையில் அவளது கணவன் "என்னடி, எதிர்த்த வீட்டுக் கல்யாணம் ஏக அமர்க்களப்படுகிறதே; பார்த்தாயா?" என்றான்.

"இப்போது அமர்களமாகத் தானிருக்கும்; நாளைக் காலையில் தெரியும் சேதி! நாடு நகரமெல்லாம் சிரிக்கப்போகிறது!" என்றாள் அந்த அசூயைக்காரி!

"எப்படி?" என்று ஆவலை உமிழ்ந்தான் அவன்.

"காலையில் கல்யாணம் நடக்காது; நின்றுவிடும்!"

"விபரமாகச் சொல்லடி!"

"கல்யாண மேடைக்கு மணப் பெண் வரவேண்டுமல்லவா?"

"ஆமாம்!'

"கல்யாணப் பெண், தலைவிரி கோலமாக பிசாசு மாதிரி மணவறைக்கு வருவாளா?"

"வரமாட்டாள்!"

"அதனால்தான் சொல்லுகிறேன்—கல்யாணம் நடக்காதென்று!"

"புரியும்படிச் சொல்! ஏண்டி நடக்காது? எப்படியடி நடக்காமல் போகும்?'

"அதுவா? இதோ பாருங்கள்—பெண் வீட்டிலேயுள்ள சீப்பை எடுத்து ஒளித்துவிட்டேன். அவள் எப்படி சிங்காரித்துச் சிவிப் பின்னல் போட்டுக் கொண்டுவர முடியும்?" என்று கையிலேயுள்ள சீப்பையும் காட்டினாள் அந்த வயிற்றெரிச்சல்காரி! இவள் யுக்தி கண்ட கணவன் இடி இடியென சிரித்தான். அந்த சிரிப்பு ஒலியையும் மிஞ்சிக்கொண்டு எதிர்த்த வீட்டிலே மேள முழக்கம் எழுந்தது.

பழைய பாட்டிப் பழமொழிக்கா ஒரு கதை கூற வந்தாய்—என்று நீ கேட்பாய் என்பது எனக்குத் தெரியும் நண்பா! ஆனால் இதைப்போல ஒரு நிகழ்ச்சி இங்கு நடைபெறுகிறது, ஜனநாயகத்தின் பெயரால்!

தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபடுவதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறதல்லவா? எப்படியாவது நம் கழகத்தை முறியடித்துவிட வேண்டுமென்று பதவி ருசி கண்டவர்கள் படாத பாடுபடுகிறார்கள், அதற்கு அவர்கள் தேர்ந்தெடுத்துள்ள வழி காட்டி, சீப்பை மறைக்கிறாளே ஒரு சிமாட்டி; அவளைத்தான்!

ஆமாம் நண்பா; நமது கழகத்திற்கெனத் தனியாக ஒரு தேர்தல் சின்னம் வழங்க மாட்டார்களாம்; புதிதாகக்கூட அல்ல; இருக்கிற சின்னங்களில் ஒன்றை நமக்கென ஒதுக்கித்தர மாட்டார்களாம். மறுத்து விட்டார்கள். சென்ற பொதுத் தேர்தலில் கலந்துகொண்டு பதிவான மொத்தவாக்குகளில் மூன்று சதவிகிதம் பெற்ற கட்சிகளுக்கு மட்டுமே தனிச் சின்னம் வழங்கப்படும் என்று பிரதம தேர்தல் அதிகாரி அறிவித்துவிட்டார். அவரை நேரில் கண்டு, நமது கழகத்தைப் பற்றிய விளக்கமுரைத்து—சென்ற பொதுத் தேர்தலில் நமது ஆதரவு பெற்றவர்கள் 20 சதவிகிதத்திற்கு மேலாக வாக்குப் பெற்றிருப்பதை சுட்டிக் காட்டி—துணைப் பொதுச் செயலாளரும், எம். பி. சுப்பிரமணியம் (எம். எல். ஏ.) அவர்களும், வேதரத்தினம், பதி ஆகியோரும் விவாதித்தும்கூட, "தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்" என்று முடிவுரை கூறிவிட்டார் தேர்தல் அதிகாரி!

புதிய கட்சிகள் தேர்தலில் நிற்க முற்பட்டால், அவைகளுக்குத் தனிச் சின்னங்கள் ஒதுக்கிவிட்டு, தேர்தலில் அவர்கள் மூன்று சதவிகிதம் வாக்குப் பெறவிட்டால் அந்தக் கட்சியைத் தகுதியற்ற கட்சியாக்குவதுதான் ஜனநாயக முறையாக இருக்கமுடியும்,

அதை விடுத்து, எதிர்க் கட்சிகளை அடக்கி வீழ்த்துவதற்கு இம்மாதிரி அக்கிரம வகைகளைக் கடைப்பிடிப்பது சீப்பை ஒளித்த கதையாகத்தானிருக்கிறது நமக்கு!

முதல் பொதுத் தேர்தலில் காங்கிரஸ், கம்யூனிஸ்டு போன்ற கட்சிகளுக்குத் தனிச் சின்னம் வழங்கப்படவில்லையா? இப்போது மாத்திரம் ஏன் இந்தப் புதுமுறை?

தி. மு. கழகம் பலமற்ற கட்சியென்கிறார்கள். இந்தப் பலப் பரீட்சையில் அதன் சக்தி புரிந்துவிடும் என்று நையாண்டி பேசுகிறார்கள். அவர்கள் கருத்துப்படியே பலஹீனமான கட்சிக்கு அவர்கள் அளிக்க வேண்டிய சலுகை எப்படியிருக்க வேண்டும்!

ஓட்டப் பந்தயத்திலே கூட பலஹீனனை சிறிது முன்னே நிறுத்தி — பலசாலி, பின்னே நின்று பந்தயத்தை நடத்தும் வழக்கம் உண்டு! ஆனால் இந்தப்போலி ஜனநாயகப் பெருமக்களோ; பலஹீனனைப் பின்னே நிறுத்துவதோடு அமையாமல் — ஆட்டத்திலே 'ஃபௌல்" பண்ணி வெற்றியடைய வழி தேடும் கேவலமான விளையாட்டுக் காரனாகவும் காட்சியளிக்கிறார்கள். அந்தோ; பரிதாபம் — சீப்பை ஒளித்து விட்டால் கலியாணம் நடக்காது என்று நம்பினாள் ஒருத்தி — இப்போதோ தாலியை ஒளித்து விட்டால்கூட கவலைப்படாமல் வாழ்க்கை ஒப்பந்தத்தை நடத்திக் கொள்கிறார்கள் என்பதை "சீப்புத் திருடி" பண்பினர்கள் உணரவில்லை நண்பா! சின்னம் தரமுடியாது தனியாக என்று கூறிவிட்ட இந்தப் புத்தியை "சின்ன" புத்தியென்றுதான் கருதிடத் தோன்றுகிறது எனக்கு! நீ என்ன நினைக்கிறாய்? அங்குள்ள நம் நண்பர்கள் என்ன நினைக்கிறார்கள்? உடன் எழுது எனக்கு!

உன் அன்புத் தோழன்.

எஸ். வி. லிங்கம் உடல் நிலை

திரு எஸ். வி. லிங்கம் அவர்கட்கு, இரண்யா ரண சிகிச்சை முடிந்து, ஆஸ்பத்திரியிலிருந்து வீடு திரும்பினார். நண்பர்கள் கவனித்து வருகிறார்கள். இனி கடிதம் எழுதுவோர் வீட்டு விலாசத்துக்கே எழுதவும்.

எஸ். வி. லிங்கம்
என். எஸ். பங்களா.
சங்கரன் ரோட், தெப்பக்குளம்
திருச்சி.

'முரசொலி'

இலங்கை,
உள் நாடு

ஆண்டு சந்தா	6-0-0
6-மாத சந்தா	3-8-0

வெளிநாடு

ஆண்டு சந்தா	7-0-0
ஆறுமாத சந்தா	4-0-0

எந்த சமுதாயத்திற்கு அஞ்சி அன்று அவளைத் திரும்பிப் பார்க்கவும் மனமில்லாமல் ஓடினனே, அதே சமுதாயத்திற்கு அஞ்சித்தான் இன்று அவள் காலடியிலே முகம் புதைத்துக் கண்ணீர் வடிக்கிறன். விசித்திரம் நிறைந்த அந்த ஆணழகனை—அய்யோ பாவம்! கடைசிவரையில் அவளால் புரிந்து கொள்ளவே முடியாமல் போய் விட்டது!

'அகல்யாவிற்கு திருமணமாமே!'

ஊருக்குத் தெரிவதற்கு முன்னால்—'அகல்யா படித்துக் கொண்டிருந்த 'மேரி மருத்துவக் கல்லூரியில்' செய்தி அதி தீவிரமாகப் பரவிவிட்டது.

அன்று காலை அகல்யா, அஜந்தா சித்திரம் ஒன்று உயிர் பெற்று நடந்து செல்வது போல—பொங்கும்பேரெழிலைச் சுமந்து கொண்டு மருத்துவக் கல்லூரி மாணவிகளுக்கே உரித்தான 'அப்சரஸ் சாயல்களோடு' கல்லூரியில் நுழைந்த போது,

'என்னடியம்மா! தனியாக வந்து விட்டாய்—எங்கே உன் சலீம்!' இப்படி கிண்டல் கணைகளைத் தொடுத்து சிரிப்பால் அகல்யாவைச் சித்ரவதை செய்து விட்டனர் அச்சிங்காரிகள்!

'சலீம் குதிரைமீதேறி வந்து கொண்டிருக்கிறன். அவன் வந்து என்னைக் காப்பாற்றுவதற்குள் வயிற்றெரிச்சல் காரிகளே—நீங்கள் எல்லாம் சேர்ந்து என்னைப் புதை குழியில் தள்ளிக் கொன்று விடுங்கள்'

உள்ளத்துக்கு குமுறலை இப்படி லேசாகக் காட்டிவிட்டு வேகமாக வகுப்பறைக்குள் நுழைந்தாள்.

'ஏ—அப்பா——ராஜாமான் சிங்கையே எதிர்த்தவளாயிற்றே அனார்கலி—அவளோடு நாம் பேசி ஜெயிக்க முடியுமா' 'மூக்கருப்பை' இப்படி சமாளித்துக்கொண்டு அங்கிருந்து கலைந்து சென்றனர் அந்த மாணவிகள்!

❋

இத்தனை நாட்களாக இரு ஜீவன்களின் இருதயங்களில் மட்டுமே ஊசலாடிக் கொண்டிருந்த 'திருமணச் செய்தி' எப்படியோ ஊரறிந்த ரகசியமாகி விட்டதே என்பதை நினைத்துப் பார்த்தபோது—ஏனோ அவள் உள்ளத்தில் ஒரு புதுபயமும்—விளக்க முடியாத வேதனையும் தலை காட்டிக் கொண்டிருந்தது.

ஊமைக்கு திடீரென்று ஒரு நாள் பேசுகின்ற சக்தி வந்து விட்டால்—அவன் சும்மாயிருப்பானு?

'திருமணம்'—இரு மனங்கள் இணைந்து சொல்லும்போது தானே—அந்த வார்த்தைக்கு ஜீவன் வருகிறது!

ஆனல் அகல்யாவின் நிலை; செய்தி பரவி விட்டதே என்பதற்காக சேற்றிலே யிரங்கி விடவா முடியும்?

அன்றிரவெல்லாம் அவளுக்குத் தூக்கமே வரவில்லை; பாலும் கசக்கும்—படுக்கையும் நோகும் என்பார்களே காதல் புலவர்கள்—அதைப் போலத் தான் யிருந்தோ என்னவோ—படுக்கையில் புரண்டு புரண்டு அவதிப்பட்டுக் கொண்டிருந்தாள்; அவள் நினைவுகள் சுழன்றன; அந்த நினைவேடுகளிலே ஒன்று—அவள் கண்முன்னல் வெளிச்சம் போட்டுக்கொண்டு நின்றது:

'அகல்யா—நிறை வேற முடியாத ஆசைகளுக்காக நீலாம்புரி பாடிக் கொண்டிருக்காதே! செத்துப்போன என் நம்பிக்கைகளுக்கு உயிர் ஊட்ட நினைக்கிருய்—வீண் முயற்சி; இதோடு விட்டுவிடு!'

'ஆண்களின் ஒரு நாள் அவசர முடிவால்தான் எத்தனையோ அபலைகள்—கண்ணீர்க் கோட்டையில் ஆயுள் கைதிகளாக வதை பட்டுக் கொண்டிருக்கிருர்கள். அன்பரே! நிதானித்து பதில் சொல்லுங்கள்; உங்கள் முடிவிலே ஒரு பரிதாபத்துக்குரியவளின் வாழ்க்கைப் பிரச்சனை ஊஞ்சலாடிக் கொண்டிருக்கிறது என்ற நினைப்போடு பேசுங்கள்!''

'நினைத்து! நினைத்து—நெஞ்சமெனும் உரைக்கல்லில் உரைத்துப் பார்த்து அதற்குப் பிறகு தான் இந்தமுடிவிற்கு வந்திருக்கிறேன்.'

''உரைத்துப் பார்த்தீர்களே; என்னிடம் என்ன குறை கண்டீர்கள்''

''அகல்யா, என் ஆத்திரத்தைக் கிளராதே-பொன் என்று உரைத்துப் பார்த்தேன்... ஆனல்...'

'ஆனல்...'

'அதையும் சொல்லித்தான் தீரவேண்டுமா?'' ஆத்திரத்தைக் கக்கினன் அழகன்.

'கட்டளை யிடவில்லை—ஒரு நாளாவது உங்கள் மார்பிலே முகம் புதைத்து மகிழ்ந்தேனே—அந்த உரிமையோடு கேட்கிறேன்!'

''அகல்யா—என் உரைகல்—பொன்னல்ல நீ—பொன்னிறம் கொண்ட கலப்பு உலோகம் என்று சொல்லிவிட்டது; என் குடும்ப அந்தஸ்தை சந்தைப் பொருளாக்கிவிட எனக்கும் விருப்பமில்லை—நான் போய் வருகிறேன்!''

★

அன்றொரு நாள் கடற்கரையில் அழகனுக்கும் தனக்கும் நடந்த அந்த உரையாடல்; தன்னைப் பொருத்த அளவில் தன் சோக நாடகத்தின் கடைசி அங்கம்; அதிலே நடந்த அந்த உரையாடல்கள், அவள் செவிகளை மோதிற்று.

ஜன்னல் திரையை விலக்கி விட்டு தெருப்பக்கம் பார்வையைத் திருப்பினுள்;

வான மண்டலத்தில் தன் கோலத் திருமேனியைக் காட்டி குளிர் மழை பெய்து கொண்டிருந்தது நிர்வாண நிலவு!

உலகமே ஆழ்ந்த நித்திரையில் சுகம் கண்டு கொண்டிருந்த அந்த நிர்மலமான இரவில்—தன் நெஞ்சம் மட்டும் புகைக்கும் எரிமலையாக யிருப்பதேன்?

அவள் கண்களில் நீர் துளும்பி அவள் சேலையை நனைத்துக் கொண்டிருந்தது.

காலம் ஓடிக் கொண்டிருந்தது! இதயக் குமறலை எழுத்துக்களாக்கி தன் நிலையை விளக்கினுள். — சமுதாயத்தின் கற்பனைக் கண்கள், இருவரையும் 'தம்பதி'களாக்கி அழகு பார்த்துக் கொண்டிருக்கும் இந்நிலையில்—அவன் தன்னைப் புறக்கணித்துவிட்டால்—பிறகு ஆயுள் முழுவதும் தான் சமுதாயத்தின் நகைப்பிற்குரிய பாத்திரமாகத்தான் நடமாட வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும் என்றெல்லாம் — அழகனுக்குக் கடிதம் மூலம் விளக்கினுள்.

அவனே; ஏரெடுத்துப் பார்க்கவும்—ஏன் என்று கேட்கவும் கூட விரும்பவில்லை; அப்படிச் செய்வது மீண்டும் தானகவே வலையில் சிக்கிக்கொள்வது போன்ற பயித்தியக்காரச் செயலாகும் என்று கருதினன்; அந்த முடிவில் உறுதியாகவும் நின்று விட்டான்.

முற்றிய நிலவு தேய்ந்து வருவதைப்போல் - பருவப் பசியால் பொங்கிச் செழித்திருந்த அவள் அங்கங்கள் எவ்வொன்றும்—பட்டினி கிடந்து கிடந்து பழகிப் போனவனுக்கு உணவினிடத்தில் ஒரு ஊமை வெறுப்பு உண்டாகிவிடுமே, அதைப் போல — அகல்யாவின் ஆசைக்கனவுகள் — பருவத்தில் ஊற்றெடுக்கும் இன்ப நினைவுகள்—உயிரிழந்து கொண்டிருந்தன.

'அத்தர் போனல் ஐவ்வாது' என்ற தாவும் மனப்பான்மை; பொதுவாகவே மனிதர்களுக்கு ஏற்படுகிற ஒரு சபல புத்தி—அது ஏனே இந்த அகல்யாவின் நெஞ்சத்திலே தலை காட்டவும் இல்லை,

தன் சிந்தையிலே ஒரு முறை பதிந்துவிட்ட அழகனின் சித்திரத்தை எவ்வளவு முயன்றும் அவளால் அழித்துவிடவே முடியவில்லை.

'குமாரி அகல்யாவாக'கல்லூரியிலே நுழைந்தவள் 'குமாரி அகல்யா எம். பி. பி. எஸ்'ஆக வெளிவந்தாள், அதுவரை தன்னைப் பற்றிய நினைவுகளே இல்லாதிருந்தாள்:

'என் மனமென்ற உரைக்கல்லில் உரைத்துப் பார்த்தேன்—நீ பொன்னல்ல—பொன் நிறம் பெற்ற கலப்பு உலோகம்' அழகன் அன்றொருநாள் உதிர்த்த இந்த நெருப்பு வார்த்தைகள், அவளைச் சித்திரவதை செய்து கொண்டிருந்தன: 'என் பிறப்பிலே மாசு; அதற்கு நானு பொறுப்பாளி — அய்யோ உலகமே'—அவள் குமுறும் நெஞ்சம் இந்த வார்த்தைகளைப் பெருமூச்சாக்கிக் கொண்டிருந்தது.

ஒரு பெண்ணின்சேவை–அன்பு கருணை யெல்லாமே கணவன் ஒருவனுக்குத்தான் அர்ப்பணிக்கப்பட வேண்டுமா?

நாதியற்றவர்களுக்கு ஏன் அவள் ஒரு 'நைட்டிங்கேல்'லாக பணி புரியக்கூடாது?

தேய்ந்து—திசை மாறிப் போனவர்களுக்கு, ஏன் அவள் சேவைக்கு வழிகாட்டும் கலங்கரை யாக அமையக்கூடாது?

அவள் மனச்சாட்சி-இப்படி அவளைப் பார்த்துக் கேட்டது;

★

அகல்யாவின் கருகிப் போன கனவுகள் தரும் வெப்பம்-மன மாளிகைகள் இடிந்து சரிந்து போனதால் ஏற்பட்ட அதிர்ச்சி-இதயவீணையின்நரம்புகள் அறுபட்டதால் உண்டான திகைப்பு — இவ்வளவையும் அந்த இல்லாதவர்களின் துயர் துடைப்பதால் உண்டாகின்ற மனே திருப்தி; அது தருகின்ற குளிர்ச்சி—அந்த குளிர்ச்சியிலே அத்தனையையும் மறந்துகொண்டிருந்தாள். என்ருலும் பருவத்திலே ஏற்பட்டுவிட்ட தழும்பு—அது மட்டும் நிழற்கோடுபோல அவள் நெஞ்சத்தின் அடித்தளத்திலே இல்லாமல் இல்லை!

அன்றிரவு—வந்திருந்த அத்தனை நோயாளிகளையும் அன்போடு கவனித்து அனுப்பிவிட்டு சாப்பிடுவதற்குள் இரவு மணி பத்தாகிவிட்டது; உணவை முடித்துவிட்டு—படுக்கை அறைக்கு வந்தாள்; வானத்தில் அதுவரை ஒளி வீசிக் கொண்டிருந்த நிலவு மறைந்து இருள் சூழ்ந்தது; சிறிது நேரத்தில் மழையும் தூர ஆரம்பித்துவிட்டது; குளிர் சுமந்துவரும் மழைக்காற்று—ஜன்னல் திரைகளை விலக்கிக் கொண்டு வீசிற்று; இடியும்

★ தொடர்ச்சி 8ம் பக்கம்

இதுவரையில்...

விடிந்தால் வெள்ளிக்கிழமை! பொழுது விடிந்ததும் தன்னைப் பெண் பார்க்க வருகிற அழகப்பனை கற்பனைக் கண்களால் சுவைத்துக் கொண்டிருக்கிறாள், வேதபுரத்து சிவநேசரின் மகள் சிந்தாமணி. அதிகாலையில் தன் தோழிகள் அண்டாள், ராதா முதலியோருடன் திருக்குளத்தில் நீராடிக் கொண்டிருக்கிறாள். அப்போது அங்கு டைகர் வருகிறான். ஊரிலே 'மைனர்'ராகிய அவன் சிந்தாமணியை மணம் செய்ய முயன்று தோற்றவன். அவனது விஷமத்தால் அவள் கால் இடறி விழுந்து பிரக்ஞை இழக்கிறாள். உடனடியாக அவளை லேடி டாக்டர் ஆனந்தியின் மருத்துவ மனைக்குக் கொண்டு போகிறார்கள். ஆனந்தி ஊரிலே நல்ல பெயர் எடுத்தவள் தான். ஆனால் பாலகங்காதரத் தேவர் என்பவரின் வலையில் சிக்கி கற்பை இழந்தவள். இப்போது டைகரிடம் ரகசிய நட்பு கொண்டிருக்கிறாள்.

இதற்கிடையில் வேதபுரம் நோக்கி வந்து கொண்டிருந்த மாப்பிள்ளை அழகப்பனும் நண்பன் நயினா முகம்மதுவும், அன்னை தாயாரம்மாளும் டைகரின் ஆட்களால் தாக்கப்படுகின்றனர். நயினா முகம்மதுவின் தந்திரத்தால் தப்பி, சிவநேசரின் இல்லம் அடைகிறார்கள்.

ஆனால் சிவநேசரும், மனைவி சிவகாமியும் காலை முதல் தொடர்ந்து அபசகுனங்கள் நிகழ்வதாகச் சொல்லி, மருத்துவ மனைக்குச் சென்று பெண்ணைப் பார்க்க வேண்டாமென்று தடுக்கின்றார்கள்; வாதாடுகிறார்கள். ஆனால் அழகப்பனும் நண்பனும் தெரியாமல் மருத்துவ மனைக்குப் போய் விடுகிறார்கள்.

அங்கே டைகரின் சூழ்ச்சித் திட்டம் உச்ச கட்டத்தை அடைந்திருக்கிறது. சிந்தாமணியின் படுக்கையில் அவளுக்குப் பக்கத்தில் சிசு ஒன்று கிடக்கிறது. நர்சு "பிரசவமாகியிருக்கிறது" என்கிறாள்.

அழகப்பன் துடிக்கிறான். சிவநேசரை மனம்போன போக்கில் திட்டி விட்டு, தாயாருடன் காரில் ஊருக்குப் புறப்பட்டு விடுகிறான். அப்போது காரின் முன்னே "நிறுத்துங்கள்" என்று கத்திய படியே வந்து விழுகிறாள் ஆனந்தி. சிந்தாமணி களங்கமுள்ளவள் என்று பொல்லாங்கு கூறி, பின் மனசாட்சிக்குப் பயந்து, அவளை மாசிலிருந்து மீட்க வேண்டி வந்தவள்தான் விபத்தில் சிக்குகிறாள். அவளை பாலையூர் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்கிறார்கள். அங்கும் வந்து விடுகிறான் டைகர். அவன் உள்ளத்தில் சிந்தாமணி மாசற்றவள்; அவள் பக்கத்தில் கிடந்த சிசு ஒரு சூதுப் பொருள்—என்ற உண்மையை ஆனந்தி வெளியிட்டு விடக்கூடாதே என்ற பயம் சூழ்ந்து விடுகிறது. ஆகவே சாதுர்யமாகப் பேசுகிறான். சிந்தாமணி தவறியவள்தான்; எனினும் தன்னைப் போன்ற ஒரு பெண் வாழ்விழப்பதை விரும்பாத ஆனந்தியின் பெண் உள்ளம், "சிந்தாமணி புது மலர்" என்று பொய் சொல்லத் துணிந்து விட்டதாகச் சொல்கிறான். நம்புகின்றனர் அழகுவும், நயினா முகம்மதுவும். ஆனந்தியின் தூய உள்ளத்தைப் புகழ்கிறார்கள். இருவருமே ஒருவருக்கொருவர் வெளியிட்டுக் கொள்ளாமல் ஆனந்தியிடம் மனதைப் பறிகொடுக்கிறார்கள்.

நயினாவையும், தன் அம்மாவையும் பெங்களூருக்கு அனுப்பிவிட்டு ஆனந்தியின் அருகிலிருக்க விரும்புகிறான் அழகப்பன். நயினா அழகப்பனை அனுப்பி வைக்க முயற்சிக்கிறான்.

முடிவில் ஆனந்தியைப் பிரிய மனமின்றி, அழகப்பன் தன் தாயாருடன் பெங்களூர் புறப்படுகிறான். ஆனந்தியின் அன்பைப் பெறும் நோக்குடன், பாலையூரிலேயே தங்குகிறான் நயினா.

இதற்கிடையே சிந்தாமணி 'வழுக்கி விழுந்தாள்' என்ற பேச்சியைத் தாங்க முடியாது தவிக்கின்றனர், சிவநேசரும், சிவகாமியும். ஆனால் தாயின் மனமோ தன் மகள் களங்கமற்றவள் என்று எண்ணுகிறது. ஆகவே இருவரும் வேதபுர மருத்துவ மனைக்குப் போகிறார்கள். அங்கே சிந்தாமணியைக் காணோம், சிவகாமி கதறிப் புலம்ப, சிவநேசர் கலகலவென நகைக்கிறார், மகள் மானமிழந்தாள் என்று நம்பிய சிவநேசர் புத்தி பேதலித்து, வெறி பிடித்தவராய் தெருவிலே ஓடுகிறார். ஊரார் கூடி, அவரை வீட்டிலே அடைக்கின்றனர். பெற்ற குழந்தையுடன் எங்கேயோ ஓடிவிட்டாள் சிந்தாமணி என ஊரார் பழிக்கிறார்கள்: இழித்துரைக்கிறார்கள்.

அன்று இரவு, இத்தனை இன்னலுக்கும் காரணமான டைகர் சிவநேசரின் வீட்டுக்கு வருகிறான். அத்தை—மாமா உறவு பேசி சிந்தாமணியைத்தானே தேடிப் பிடித்து அழைத்து வருவதாகக் கூறுகிறான். அப்படி அழைத்து வந்தால், அவளைத் தனக்கே மணம் முடித்து வைக்கவேண்டுமென்றும் நிபந்தனை விதிக்கிறான். சிவகாமி இக்கட்டான நிலையில் நின்று தவிக்கிறாள்.

திட்டமிட்டு வேலை செய்த அந்த நிக்குண முரடனே தத்தளித்துக் கொண்டிருந்த அந்தத் தாயிடம் "என் மகள் உனக்கே" என்று குல தெய்வத்தின் மேல் சத்தியம் வாங்கிச் செல்கிறான்.

நேரே மருத்துவமனை சென்று பூட்டி வைக்கப்பட்டிருக்கும் சிந்தாமணியிடம் சரசமாடத் தொடங்குகிறான். அவள் தன்னைக் காத்துக் கொள்ளத் தயாராகிறாள். 'சிந்தாமணி தனக்குத்தானே!' என்று எண்ணிய டைகர் அவளை வீட்டுக்கு அனுப்ப முடிவு செய்து வண்டி ஏற்பாடு செய்கிறான். அவள் வண்டியில் ஏறி உட்காருவதற்கு எதிர்பாராதவிதமாக உதவி புரிகிறான். அப்போது அங்கு ஓடி வரும் சிவநேசர், டைகரின் பிடியில் சிந்தாமணி இருப்பதைக் கண்டு, மகள் மாசு படிந்தவள் என்ற எண்ணத்தால் தாக்குண்டு, இன்னும் பித்தம் அதிகமாகி உளறுகிறார். வீட்டை விட்டு ஓடிவந்த கணவரைத் தேடி ஓடிவரும் சிவகாமியும் சிந்தாமணியும் சந்தித்துக் கொள்கிறார்கள். டைகர் மூவரையும் வீட்டுக்கு அனுப்பி வைக்கிறான்.

பாலையூர் மருத்துவமனையில் பல்கனிப் பக்கம் கைத் துப்பாக்கியுடன் ஓர் உருவம் காத்திருப்பதையும் கவனியாது, ஆனந்தியின் நித்திரை அழகை ரசித்துக் கொண்டிருக்கிறான் நயினா முகம்மது...அப்போது அங்கே வந்த நர்ஸ், மருந்துச் சீசாவை மேசையின்மேல் வைத்து விட்டுப் போகிறாள். ஆனால் அந்த மர்மமான கரிய உருவமோ மருந்து சீசாவில் விஷத்தைக் கலந்து விடுகிறது...அதைக் கவனியாத நயினா, ஆனந்தி விழித்ததும், ஆர்வமுடன் மருந்தைக் கொடுக்கப்போகிறான். அதை விஷம் என்று கண்ட ஆனந்தி, நயினாவின் மேல் சந்தேகம் கொள்ளுகிறாள். ஆனால், விஷம் இருந்த சிமிழைப் பார்த்தபோது, அது வேதபுரத்தில் தனது மருத்துவ மனையில் இருந்தது-என்பதை உணருகிறாள். நயினாவின் மேல் தவறாக சந்தேகித்ததாகக் கூறுகிறாள்; அப்போது திடீரென்று துப்பாக்கி வேட்டு சப்தம் எழும்புகிறது!

துப்பாக்கியொலி கேட்டு நயினா முகம்மது வெளியே ஓடுகிறான். அங்கே டைகர், மருத்துவமனைக் காவலாளியைச் சுட்டுவிட்டான் என்று தெரிகிறது. டைகர் போலீசாரால் கைது செய்யப்பட்டு போலீஸ் வண்டியில் கொண்டு செல்லப்படுகிறான். நயினா, ஆனந்தியிடம் நடந்த விஷயங்களைக் கூறுகிறான். ஆனந்தி நயினாவிடம் மனம் விட்டுப் பேசி, டைகரின் தீய செயல்களை விளக்கி, சிந்தாமணி களங்கமில்லாதவள் என்று நம்பும்படிச் செய்கிறாள். நயினாவும், அழகப்பன்-சிந்தாமணி திருமணத்தை எப்படியும் முடித்துவிடுவதாகக் கூறுகிறான். பிறகு, ஆனந்தியின் மீது தனக்குள்ள காதலை வெளியிட நேரிடுகிறது. ஆனந்தி, தான் டைகரின் வைப்பாட்டி யென்ற வார்த்தைகளைக் கூறிவிட்டு கண்களை மூடிப்படுக்கையில் சாய்கிறாள். பிறகு......

14

அவன் சிறிதும் எதிர்பார்க்காத கணை பாய்ந்துவிட்டது. அவன் தன்னைத்தானே சமாளித்துக் கொள்ளவே நிரம்ப நேரம்பிடித்தது. ஆனந்தியின் சொற்களிலே காணப்பட்ட அந்தத் தரக் குறைவு அவள் முகத்திலே காணப்படவில்லை. அதையும் அவனால் உணரமுடிந்தது. வாழ்க்கையிலே மிக வெறுப்புற்று, சாவதற்குப் பயந்து கொண்டிருந்த ஒருத்தி தன் அந்தரங்க வாழ்வின் அந்தகாரத்தை ஆத்திரமாக வெளியிடும்போது சூடான வார்த்தைகள் பொறி பறக்கக் கிளம்புவதிலே வியப்பில்லை யென்றும் தனக்குத் தானே சமாதானம் சொல்லிக் கொண்டான். அவள் மீது அலட்சியம் பிறப்பதற்குப்பதில் அனுதாபமே பிறந்தது. அவளுக்கு என்ன சூழ்நிலையோ—ஏன் இப்படிக் கெட்டுவிட நேர்ந்ததோ — என்றெல்லாம் கேள்விகளைப் போட்டு விடை காண முடியாமல் தத்தளித்தான். இதயத்தில் எழும் இளம் பருவ நமைச்சலுக்கு அவள் கண்டுபிடித்த மருந்தல்ல டைகர்—என்பதை மட்டும் இப்போது நயினா தெளிவாகப் புரிந்து கொண்டான். இந்த வார்த்தைகளுக்குப் பிறகும் தனது முயற்சியைத் தொடருவதா கூடாதா என்ற ஐயம் சிறிது நேரமே அவனிடம் நிலைத்திருந்தது. பின்னர் அவன் ஒரு முடிவுக்கு வந்து விட்டான். தன் ஆசை நிறைவேற வேண்டும் என்ற நோக்கத்திலே சிறிது மாற்றம் ஏற்பட்டது. . திருத்தமென்றும் கூறலாம் அதை! அவள் வாழ்வு வளம்பெற வேண்டும்—அதற்குத்தான் துணையாக இருக்க வேண்டும். என்ற பொது நோக்கையும் தன்

தீர்மானத்தோடு இணைத்துக் கொண்டான்.

இப்போது அவள் மிகவும் குழம்பிப்போய் இருக்கிறாள்; மேலும் அவளைத் தொந்திரவு செய்ய வேண்டாமென்ற எண்ணத்துடன் அவளை அப்படியே தூங்க விட்டுவிட்டு நயினா, தாழ்வாரத்திலுள்ள தனது இருப்பிடத்திற்கு வந்துவிட்டான். காலை மலரட்டும்; ஆனந்தியின் வாழ்விலும் ஒரு மறு மலர்ச்சி காணத்திட்டம் தயாரிப்போம் என்ற பெரு நினைப்போடு—கட்டுக் குலைந்து வரும் இருளைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்து விட்டான்.

★

டைகரால் அனுப்பி வைக்கப்பட்ட சிவநேசர், சிவகாமி, சிந்தாமணி மூவரும் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். சிவநேசரை மிகவும் சிரமப்பட்டு வீட்டில் அடைத்து வைத்தார்கள். காலை முதல் ஏற்பட்ட தொல்லைகளை யெண்ணிக் கண் கலங்கி நின்றாள் சிந்தாமணி. அவள் கலங்கிய உள்ளத்தை இன்னும் சிறிது உடைப்பது போல், பெங்களூர் மாப்பிள்ளை வீட்டார் சிந்தாமணி பற்றித் தவறாகக் கருதியதையும், கோபித்துக் கொண்டு போன நிகழ்ச்சிகளையும், ஆனந்தி காரில் அடிபட்டு பாலையூர் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டதையும் சிவகாமி ஒன்றுவிடாமல் கூறி புலம்பியழத் தொடங்கினாள். தன் கற்புக்கு மாசு கற்பிக்கப்பட்ட பயங்கர சம்பவத்தை சிந்தாமணியால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. எப்படி இயலும்? வசீகரம் நிறைந்ததும், வனப்பு செறிந்ததுமான வாழ்க்கை வானத்தில் பறப்பதற்கு சிறகடிக்கும் சித்திரப் புள் அவள்! அவளது இறக்கைகளை வெட்டி வீழ்த்தி இழிவுப் படுகுழியில் தள்ளுவதென்றால் அவளால் அந்த வேதனையை எவ்வாறு ஏற்றுக் கொள்ள சாத்தியமாகும்! தனக்கு ஏன் இப்படி ஒரு கஷ்டம் வர வேண்டும்? விடைகாண முடியவில்லை அவளால்! பூர்வ ஜென்ம பூஜா பலன் என்பார்கள் புத்தியைத் தீட்ட மறுப்பவர்கள். சிந்தாமணி, அந்த வேதாந்தக் கருத்துக்களால் சாந்தியடைய மார்க்கமில்லை. அவள் பதில் தேடி அலைந்தாள்; அம்மாவின் மார்பில் சாய்ந்து அழுதாள். "ஏனம்மா! எனக்கு இப்படி ஒரு சங்கடம் வந்தது? நான் யாருக்கு என்ன துரோகம் செய்தேனம்மா! என் வாழ்நாள் எல்லாம் வீணாகி விட்டதே தாயே! சிந்தாமணியைக் கொலை செய்திருக்கலாமே—அய்யோ! இனிமேல் என் சவத்திற்குக்கூட யாரும் மரியாதை காட்ட மாட்டார்களே" என்று கதறினாள். மகளின் கண்ணீர் ஊற்றைத் தடுக்க மாதாவினால் இயலவில்லை. அவளும் சேர்ந்து அழுதாள். மாப்பிள்ளை வீட்டாரிடம் என்னை மாசுபடிந்தவள் என்று காட்டி, அதனால் லாபம் பெற்றவர்கள் யாராயிருக்க முடியும் என்று சிந்தித்தாள். டைகரேதான்! அவன்தான் இந்தச்சதி நடத்தியிருக்க வேண்டும் என்று முடிவான அபிப்பிராயங் கொண்டாள்.

"இந்தக் கொடுமை நிறைந்த பழிச் சொல்லிலே யிருந்து எப்படி மீளுவது அம்மா?"

"எனக்குத் தெரியவில்லை என் கண்ணே!—என்ன சமாதானம் சொன்னாலும், மாப்பிள்ளை வீட்டார் உன்னை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை!"

"ஏற்றுக் கொள்ள வேண்டாம். கவலையில்லை. ஆனால் அவர்கள் என்னைப்பற்றிக் கொண்டிருக்கும் தவறான கருத்தையாவது மாற்றிக் கொள்ளச் செய்யவேண்டும் அம்மா!"

"சிந்தாமணி! என்னைச் சித்ரவதை செய்யாதே—நம்ப குடும்பத்திலே இப்படி யெல்லாம் நாசகாலம் நுழையுமென்று நான் நினைக்கவேயில்லை!"

"என்னை நான் தூய்மையானவள் என்று நிலை நாட்டிக் கொள்ளவேண்டும். எனக்குக் கல்யாணம் வேண்டாம் — கல்லெடுப்பும் வேண்டாம்! என் தந்தையும், உலகமும் என்னை மாசற்றவள் என்று கூறினால் போதும்—அந்த நல்லவார்த்தையைக் கேட்டுவிட்டு உடனே சாவதானாலும், கவலையில்லை. நான் குற்ற மற்றவள் என்று நிரூபிக்கப்படும் வரையில் சாக மாட்டேன்! சாகமாட்டேன்!"

சிந்தாமணி வெறி கொண்டவள்போலக் கத்தினாள். அவளை சாந்தப்படுத்தி உட்கார வைக்க சிவகாமி எவ்வளவோ முயன்றும் நடக்கவில்லை. அப்போதே பாலையூர் மருத்துவ மனைக்குப் போய், அந்த ஆனந்தியைப் பார்க்க வேண்டுமென்றும், அவளிடம் தன்னைக் கொடுமைப் படுத்தியதற்குக் காரணம் கேட்கவேண்டுமென்றும் ஆவேசமாகக் கூறிக் கிளம்பினாள். சிவகாமி என்ன சமாதானங் கூறியும் அவள் நிற்கவில்லை. 'இப்போதே பாலையூர் போக வேண்டும். அங்கு விபரமறிந்து உடனே பெங்களூர் போக வேண்டும்.' இது அவளது ஆத்திரமான முடிவு. இந்த இருட்டில் எங்கும் போகக் கூடாது எனத் தடுத்தாள் தாய்.

"இருட்டு! என் வாழ்க்கையை விடவா பயங்கரமானது—வெளிச்சத்தில் இந்த ஊரார் முகத்தில் எப்படி விழிப்பேன்? என் அருமைத் தோழிகள் முகத்தை எப்படி ஏறெடுத்துப் பார்ப்பேன். என்னை மூடியிருக்கும் களங்கப் பனியை விலக்கிய பிறகே வேதபுரத்துக்குத் திரும்புவேன். அம்மா! நீ அப்பாவை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்! நான் வருகிறேன்."

என உரைத்துக் கிளம்பினாள். அவளை வழி மறித்துக் கொண்டு சிவகாமி, "கண்ணே! களங்கம் உன்னை ஒன்றும் செய்யாது! எனக்கு நீ பத்தரை மாற்றுத் தங்கம். மாசற்ற மாணிக்கம். ஊரும் உலகமும் அந்த அவசரக்கார மாப்பிள்ளை வீட்டுக்காரர்களும் என்ன சொன்னால் நமக்கென்ன? நீ எனக்கு மகள் என்பதைக் கூடவா மறுத்து விடுவார்கள்! கல்யாணந்தானே ஆகாமற் போகும்! போனால் போகட்டும்!" என்று தேம்பித் தேம்பி அழுதாள்!

"கல்யாணத்தைப் பற்றிக் கவலைப்படவில்லையம்மா நான்! மணிமேகலையைப் படித்திருக்கிறேன். அவளுக்கிருந்த உள்ளத்தை என்னாலும் படைத்துக் கொள்ள முடியும். ஆனால், என்மீது வீசப்பட்ட அவச்சொல்லை—அவமானச்சொல்லை—அறவே அகற்றியாகவேண்டும். அதுவரையில் எனக்குத் தூக்கமில்லை. வேறு காரியங்களில் ஊக்கமில்லை. என்னைத் தடுக்காதீர்கள்! தணலாயிருக்கிறது நெஞ்சு! அதில் தண்ணீர் கொட்டப்படவேண்டும். வருகிறேன்......வெற்றி பெற்றால் திரும்புகிறேன். இல்லையேல் எனக்கு நடத்தவேண்டிய இறுதிக் காரியங்களை நீங்களும் அப்பாவும் இருந்து நடத்திவிடுங்கள்!" ஒரு மகள் இப்படிப் பேசும்போது தாய்மையின் பாசம் பெருக்கெடுக்கும் பெற்ற வயிறு எப்படிப் பற்றி எரிந்திருக்கும்! சிவகாமி அழவுமில்லை; பேசவுமில்லை; சிலையானாள். சிந்தாமணியைத் தடுக்கவும் விரும்பவில்லை. சிந்தாமணி, தாயின் காலில் விழுந்து வணங்கிவிட்டு வீட்டைவிட்டு வெளியே ஓடினாள். வைகறையை நோக்கித் திரும்புவதற்குத் தனது முதலடியை எடுத்து வைத்துவிட்ட இரவில் அவள் ஓடிக்கொண்டேயிருந்தாள்.

ஆனந்தியைப் பாலையூரில் சந்திக்க வேண்டும். தன்னை அவமானச்சின்னமாக்க அவள் ஏன் இடமளித்தாள் என்பதைக் கேட்கவேண்டும். சரியான பதில் கிடைக்காவிட்டால் பழிக்குப் பழி தீர்த்துக் கொள்ளவேண்டும். இப்படி வஞ்சங்கொண்டு புயல் காற்று போலத் தெருவிலே ஓடினாள். வேதபுரத்திலிருந்து பாலையூருக்கு ஓடுவதென்றால் அவ்வளவு சுலபமான விஷயமா?

இந்த பீதி அவளுக்கு எழவுமில்லை, எழ நியாயமுமில்லை.

ஓடி, ஓடி இறுதியில் பாலையூநக்தள் நுழைந்துவிட்டாள் சிந்தாமணி. அவ்வளவு விரைவில் ஓட்டப் பந்தயக்காரர்கள் கூட வேதபுரமிருந்து பாலையூநக்கு வந்திருக்க முடியாது. பந்தயக்காரர்கள் நோக்கம், பரிசு பெறவேண்டு மென்பது—இவள் நோக்கம் பழி துடைத்துக் கொள்ளவேண்டும் என்பதல்லவா? பாலையூர் தெருக்களிலே மருத்துவமனையைத் தேடித் திரிந்தாள். அவள் எதிரில் போலீஸ் வண்டி வந்து கொண்டிருந்தது. அந்த வண்டியிலேதான் மருத்துவமனையில் கைது செய்யப்பட்ட டைகர் இருந்தான். தன் வாழ்வுக்கு விஷம் தூவ வந்த நச்சரவு தன் எதிரேதான் போய்க் கொண்டிருக்கிறான் என்பது சிந்தாமணிக்குத் தெரியாது. ஆனால் போலீஸ் வண்டியிலிருந்த டைகர், ஒரு பெண் வேகமாக வருவதையும், அவள் சிந்தாமணி ஜாடையாக இருப்பதையும் கவனித்து விட்டான். ஒரு விளக்குக் கம்பத்தின் பக்கம் அவள் போனபோது டைகருக்குச் சந்தேகம் பலமாகி விட்டது. தொண்ணூறு சதவிகிதம் அவள் சிந்தாமணியாய்த் தானிருக்க வேண்டு மென்று சொல்லிக் கொண்டான். விஷயமனைத்தும் கேள்விப் பட்டு, மனமொடிந்து எங்கேயோ கிளம்பி விட்டாள் போலும் என எண்ணினான். எப்படியாவது அவளை இப்போது பிடித்துவிட வேண்டும் என் செய்வது என்று ஏங்கினான். பெண் விஷயமென்றால் பேராபத்தும் சிறு துரும்பாகத் தெரியுமென்பது பொய்யாகுமா? போலீஸ் வண்டி போய்க் கொண்டிருக்கும் போதே அதிலிருந்து குதித்து விட்டான். போலீசார் துரத்தினர். எங்கேயோ ஓடி மறைந்து விட்டான்.

(தொடரும்.)

சென்னை
பெத்துநாய்க்கன்பேட்டை
11—8—56 மாலை
பொதுக்கூட்டத்தில்
மு. கருணாநிதி
சொற்பொழிவாற்றுவார்.

கடலூரில்
12-8-56 மாலை
பொதுக்கூட்டத்தில்
மு. கருணாநிதி
சொற்பொழிவாற்றுவார்.

வேடசந்தூர் தி. மு. க. துவக்க விழா

6—8—56 திங்கள் மாலை 6—30 மணி அளவில், மாரியம்மன் கோவில் முன்பு, தோழர் மதுரை எஸ். முத்து தலைமையில் விழா நடைபெறும். அப்போது தோழர்கள் நாஞ்சில் கி. மனோகரன் பி. ஏ. (ஆனர்ஸ்) மதுரை அ. வே. சௌந்தரராசன் பி. ஏ. ஆகியோர் பேசுவர்.

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

மின்னலும் ஆரவாரம் எழுப்பின: படுக்கையிலிருந்து எழுந்த அகல்யா ஜன்னல் கதவுகளை இழுத்து மூடிவிட்டு மீண்டும் போய் படுக்கையில் சாய்ந்தாள்.

தெருக்கதவை யாரோ படபடவென்று வேகமாகத் தட்டுவதுபோல யிருந்தது. ஒவ்வொரு விநாடியும் வேகம் அதிகரித்துக் கொண்டிருந்தது அகல்யா கதவைத் திறந்தாள்; ஒரு விநாடி அசைவற்று—மின்சாரத்தால் தாக்குண்டவள் போல செயலற்று நின்றாள்.

'ஏன்—எதற்காக இங்கே வந்தாய். நெஞ்சிலே இரக்கமில்லாத பெரிய மனிதரே! ஏன் நான் இங்கே நிம்மதியாக இருக்கிறேன், அதற்கும் குழிபறித்து விடவா இந்த நள்ளிரவில் இங்கு வந்தாய்!'

இத்தனை நாட்களாக உறங்கிக் கொண்டிருந்த அவள் உள்ளக் குமுறல் மீண்டும் தலைகாட்ட ஆரம்பித்தது; அவள் வார்த்தைகளில் அழுகை கலந்த ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வந்தது.

'அகல்யா! ஆத்திரப்படாதே. ஏன் வந்தேன் என்பதைத் தெரிந்து கொள்வதற்கு முன்னால் எரி மலைபோல் அனல் கக்காதே! குமாரி அகல்யாவிடம்—வரவில்லை இந்த அழகன்; டாக்டர் அகல்யாவிடம் உதவிக்கு வந்திருக்கும் சாதாரண மனிதன் நான்!'

'உதவி, உள்ளமில்லாதவனே—உதவியா வேண்டும் உனக்கு: என் வாழ்வின் இன்பங்களையே உனக்காக உதறி எறிந்துவிட்டேனே நான்! உனக்காக என்னை நானே தத்தம் செய்து கொண்டேனே! இன்னும் என்ன எதிர்பார்க்கிறாய் என்னிடத்தில்! போய்விடு இங்கிருந்து. என் அமைதியைக் குலைத்து நாசமாக்கி விடாதே!' அவள் கண்களில் கண்ணீர் கொப்பளித்து; சாரை சாரையாக வழிந்து அவள் மார்பகங்களை நனைத்துக் கொண்டிருந்தது;

'இந்தப் பெரு மழையில் என்னை எங்கே போகச் சொல்கிறாய் அகல்யா?'—இரக்கம் மேலிட அழகன் இதைச்சொல்லும் போது—ஏனோ அவள் உள்ளத்தில் ஒரு பரிதாப உணர்ச்சி 'சுருக்கென்று' பாய்ந்தோடியது! பழைய சம்பவங்கள் அகத்துறை காட்சிகளாக அந்த ஒரு விநாடியில் அவள் கண்முன்னால் உருண்டோடின.

'சரி—மழை நிற்கட்டும்—அதற்கு மேல் தயவு செய்து இங்கு இருக்கவேண்டாம்' நனைந்து போயிருந்த ஆடைகளைக் கைகளால் பிழிந்து விட்டபடியே 'அகல்யா!!' என்றான் அழகன்: அவள் பேசாமல் நின்றாள்:

அழகன் சற்று அவளை நெருங்கி வந்தான்:

'அகல்யா: எந்த சமுதாயத்திற்கு அஞ்சி அன்று உன்னை விட்டு ஓடினேனோ—அதே சமுதாயத்திற்கு அஞ்சித்தான் இன்று உன்னைத் தேடி ஓடி வந்திருக்கிறேன்! அன்று என் கருணைக்காக நீ என் காலடியிலே புரண்டபோது—எந்தக் கைகளால் உன்னை உதறித் தள்ளினேனோ அதே கைகளால் உன் கால்களைப் பிடித்து உதவி கோற வந்திருக்கிறேன்; தேடி வந்தப் பெண்ணழகை, அன்று தெருவிலே இழுத்துத் தள்ளிய இந்தப் பாவிதான் அகல்யா—இன்று திசை மாறிப்போன படகுபோல தத்தளிக்கிறேன். அகல்யா—அன்றொரு நாள் என் மார்பிலே உன் மதிமுகம் புதைத்து — என் கன்னங்களிலே உன் மலர் இதழ் பதித்து—இன்பச் சொற்கள் உதிர்த்தாயே! அந்த ஒரு நாள்—நாம் கண்ட இன்பத்தின் பேரால் கேட்கிறேன், எனக்குக் கருணை காட்டு—உன் கால்களில் முகம் வைத்து—என் கண்ணீரால்—நான் உன் வாழ்வைப் பாழாக்கிய குற்றத்திற்கு பாத பூஜை செய்கிறேன்—என்னை மன்னித்துவிடு—என் மனப்புயலை அடக்க மார்க்கம் காட்டு; பெண் தெய்வமே! என்னைக் காப்பாற்று!''—அழகன் சிறு குழந்தைபோல் அழுதபடியே அகல்யாவின் கால்களைப் பற்ற நெருங்கினான்:

அதற்குமேலும் இருதயத்தை இரும்பாக்கிக்கொண்டு நிற்க முடியவில்லை அவளால்; அவள் உள்ளத்தில் குமுறிக் கொண்டிருந்த சக்தியெல்லாம் அழுகையாக பீறிட்டுக்கொண்டு வந்தது. கைகளால் முகத்தைப் புதைத்துக் கொண்டு வீறிட்டு அழுதபடியே கட்டிலில் வந்து விழுந்தாள்; அந்த நள்ளிரவில் இரண்டு உள்ளங்களின் குமுறல் விம்மலாகவும்—விக்கலாகவும் அந்த அறையிலே எதிரொலித்துக் கொண்டிருந்தது.

'அகல்யா! ஜாதித் திமிரால் அன்று பேதங் கற்பித்து விலக்கி விட்ட இந்த மகாயோக்கியன் தான், இன்று கற்பச்சிதைவுக்கு; இந்த உலகத்தில் வாழவரும் ஒரு ஜீவனின் அழிவுக்கு—வழி தேட வந்திருக்கிறேன்!' இதைக் கேட்டபோது—தேள் கொட்டியவளைப்போல துடித்து அலறினாள் அகல்யா—

'அடப்பாவி!' இதயத்தின் அடித்தளத்திலிருந்து இந்த வார்த்தை வெளிவந்தது.

'பாவிதான் அகல்யா; பழிபாவங்களுக்கு அஞ்சாதப் பாவிதான்; தவறிவிட்டேன்; குடும்பப் பெண்ணொருத்தியின் கற்பை சூறையாடிவிட்டேன்; அகல்யா! அந்த அபாக்கியவதி இன்று கர்ப்பவதி! என் கருணைத் தெய்வமே! கைகொடு! என்னைக் காப்பாற்று!'

★

அகல்யாவின் முகத்தில் ஏதோ ஒரு மலர்ச்சி—இதுவரை அவள் முகத்தில் ஏற்படாத புதிய 'களை' ஒன்று மின்னலிட்டது;

அவள் கொவ்வை உதடுகள் முத்துப் பற்களுக்கிடையே சிக்கித் திணறின.

அப்பப்பா, அவள் முகத்திலே திடீரென்று நிழலாடிய அருவருப்பான கீறல்கள்!

அவள் கண்களிலே ஆட்டம் போட்ட வெறிக் கூத்து!

'பழிக்குப் பழி!' அவள் வாய் இப்படி முணுமுணுத்தது, மழை வேகமாக தன் பாய்ச்சலை நடத்திக் கொண்டிருந்தது.

அதுவரை நீறுபூத்த நெருப்பாக உறங்கிக் கொண்டிருந்த அவள் உணர்ச்சி நரம்புகள் தலைதூக்கி நின்றன;

இத்தனை நாள் மரத்துப் போயிருந்த உள்ளப் பசி, உடற் பசி, அத்தனையும்—பெரும் பசியாக மாறி தன் வெறி நாக்குகளை வேகமாக சுழற்றின;

'சரி—புறப்படலாம்; என்ன கொண்டு வந்திருக்கிறாய்'

'எத்தனை ஆயிரம் வேண்டும்' ஆர்வத்தோடு கேட்டான் அழகன்!

'ஆயிரங்களுக்காக உயிர் வாழும் ஜடங்களல்ல பெண்கள்—ஒரு ஆணின் அன்பிலே தான் ஆயிரங்களைக் கண்டு கொண்டிருக்கிறார்கள்'

அவன் ஊமையாகி நின்றான். அகல்யா இரு கரங்களை நீட்டியபடி அழகனை நெருங்கினாள்; அவன் மோதவரும் பெண்ணழகின் வெறிக் கூத்தைக் கண்டு நடுங்கினான்: இடியும் மின்னலும் பயங்கரமாக இரைச்சல் போட்டது; மழையின் வேகம் மேலும் அதிகரித்தது. மின் அதிர்ச்சியால் மின்சார விளக்கு அணைந்தது. ஒரே இருள்! இரண்டு ஜீவன்களின் இருதயத் துடிப்பு சில விநாடிகள் இணைந்து ஒலித்தன!

★

மழை நின்றது. பொழுது விடிய இன்னும் சில மணித் துளிகளே யிருந்தன. அகல்யா நலுங்கிக் கிடந்த ஆடைகளைச் சரி செய்து கொண்டு யெழுந்தாள். அவள் முகத்தில் ஒரு புதிய சோபை—திருப்தியின் சாயல் தென்பட்டது.

புறப்படுவோமா என்றாள்; வெளிறிக்கிடந்த முகத்தோடு 'சரி யென்று' தலையசைத்தான் அழகன்.

'கிரீச்' என்ற பயங்கரச் சத்தத்துடன் டாக்சி திடீரென்று நின்றது. டிரைவரின் கரங்கள் நடுங்கின. 'டாக்டரம்மா! அதோ பாருங்கள்! என்று ஒரு மரத்தைச் சுட்டிக் காட்டினான். 'அய்யோ' என்று அலறினாள் அகல்யா. காரிலிருந்து மூவரும் வேகமாக யிறங்கி சாலையோரத்தில் இருண்டு வளர்ந்திருந்த அந்த புளிய மரத்தை நெருங்கினார்கள். ஒரு கர்ப்பிணி, அந்த புளிய மரத்திலே தூக்குப் போட்டுக் கொண்டிருந்தாள். அப்பொழுதுதான் அந்தப் பரிதாபத்துக்குரியவளின் உடலிலிருந்த ஆவி பிரிந்திருக்கிறது.

கண்கள் பிதுங்கி—கிட்டிப் போன பற்களுக்கிடையே நாக்கு தொங்கி—கை கால்கள் விறைப்பேறி — மணிக் கழுத்து கோரமாக வளைந்து—அந்தப் பெண்ணழகு சிதைந்து கிடந்தது.

'நான் பெற்ற மகளம்மா' தலையிலே கை வைத்துக் கொண்டு கதறினான் டாக்சி டிரைவர்.

'எந்த அயோக்கியன் செய்த கொடுமையோ!' கண்களில் தளும்பி நின்ற நீர்த் துளிகளை வழித்து விட்டபடியே சொன்னால் அகல்யா!

உயிர் வற்றிப்போன சிலை போல அழகன் நின்றான். அவன் முகத்திலே பிரேதக்களை வழிந்து கொண்டிருந்தது. இதை புரிந்துகொள்ள அகல்யாவிற்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

அவள் தலை சுழன்றது: அவள் வீட்டு வாயிலிலே தொங்கிக் கொண்டிருந்த 'டாக்டர் அகல்யா' என்ற மரப் பலகையை யாரோ சுக்கு நூறாக உடைத்தெரிவது போல் தோன்றிற்று. அவள் கழுத்திலே தொங்கிக் கொண்டிருந்த 'ஸ்டெதாஸ் கோப்பை' ஒரு முரட்டுக் கரம் தரையிலே பிடுங்கி வீசி யெறிவதைப் போல உணர்ந்தாள். 'அய்யோ' இரு கரங்களாலும் தலையை அணைத்தபடியே இப்படி அலறி விட்டாள். ●

திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக
பிரதிநிதிகள் கூட்டம்

அன்புடையீர்! வணக்கம். நாளது 5—9—56 ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு திருச்சி திராவிடப் பண்ணையில் (9 கிலேதார் தெரு) மாவட்டப் பிரதிநிதிகள் கூட்டம் நடைபெறும். அனைவரும் தவறாது வர வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறேன்.

குறிப்பு: எல்லா கிளைக்கழக செயலாளர்களும். புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கிளைகளின் பொறுப்பாளர்களும் இதையே அழைப்பாகக் கருதி கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

அன்பன்,
அ. பெ. தர்மலிங்கம்,
செயலாளர்.

காமராசரே! உண்மைதானா?

பாகு மொழி பேசி தன் பழ உதடுகளைக் கவ்வி இன்பம் முடித்தவன் கணவனல்ல என்று தெரிந்த பிறகும், கள்ளக் காதலனோடு 'காதல் விளையாட்டு' நடத்திய அகலிகை — கௌதமனைக் கண்டதும் கசிந்தும் கலங்கியும் — நெளிந்தும் நீலிக் கண்ணீர் வடித்தும் — கைகளைப் பிசைந்து கொண்டு நின்றாளாம்!

அந்த அகலிகையின் நிலையிலேதான் முதல்வராம் கனம் காமராசரை வைத்து மதிப்பிட முடிகிறது நம்மால். எந்த ஐந்தாண்டுத் திட்டம் தென்னகத்தை மோசம் செய்து விட்டதோ—

எந்த ஐந்தாண்டுத் திட்டத்தால் தமிழர்கள் பகிரங்கமாக ஏமாற்றப்பட்டார்களோ—

எந்த ஐந்தாண்டுத் திட்டம் கூனிப்போயிருக்கும் தென்னகத்தின் முதுகிலே பட்டை நாமம் குழைத்துப் போட்டு—கண் துடைப்பு வேலை நடத்தியதோ—

எந்த ஐந்தாண்டுத் திட்டம் சுரண்டப்பட்டும் — சுருண்டு கிடக்கும் தென்னகத்தைத் திரும்பிப் பார்க்கவும்-மறுத்து விட்டதோ-

எந்த ஐந்தாண்டு திட்டத்தை 'தமிழர்களுக்கு ஒரு சூதத் திட்டம்' என்று எல்லா நல்லெண்ணம் கொண்ட அரசியல் இயக்கங்களும் சொல்லி வந்தனவோ அதே ஐந்தாண்டுத் திட்டத்தை தலைகீழாக மாற்றி—பிரச்சினையின குறைபாடுகளையே வேறு பக்கம் திருப்பி—பேச்சு மேடையிலே துணிந்து பேசியிருக்கிறார் கண்ணியம் தெரியாத தமிழகத்தின் முதல்வர்;

'வடக்கு தெற்கு பற்றிப் பேசும் நண்பர்கள்— பாகரா நங்கல் அணைத் திட்டத்திற்கு நூறு கோடி செலவு செய்தார்களே; நமக்கு என்ன செய்தார்கள் என்று கேட்கிறார்கள். என் ஊரில் ஓடும் கௌசிகை நதியில் தண்ணீரே இல்லையே அங்கே பெரிய அணை கட்டி என்ன புண்ணியம்? இது போலத்தான வடக்கு தெற்கு செலவு கணக்கைப் பார்ப்பது தவறு''

வற்றிக் கிடக்கும் கௌசிகை நதியில் அணை கட்டி என்ன புண்ணியம்? கேட்கிறார் காமராசர்! ஐந்தாண்டுத் திட்டங்களில் குறை கண்டு விளக்கிவரும் நம்மையெல்லாம் முட்டாள்களாக்கி விட்டதாக நினைத்துக் கொண்டு, உரத்தக் குரலில் பேசினாராம்; 'நீரில்லா ஆற்றுக்கு அணை யேன்?'—கேட்டாராம்: இந்த நாடாள வந்தவரைப் பார்த்து ஏன் நகை சிந்த மாட்டார்கள்!

தி. மு. கழகத்தவர்கள் 'செருப்புக் கால்களுடன் கோயிலுக்குள் நுழைந்தவர்கள'

'நீரில்லா ஆற்றுக்கு அணைக் கட்டும்படி கேட்கின்றவர்கள்'

எவ்வளவு பெரிய குற்றச் சாட்டுகள்! உண்மையிலேயே நமக்கெல்லாம் அவரிடம் அனுதாபம் ஏற்படுகிறது! என்னதான் குழம்பிப் போய் இருந்தாலும் ஒரு மனிதருக்கு இவ்வளவு சிந்தனைச் சரிவா ஏற்பட வேண்டும்!

கத்தும் அலைகடல் தரும் முத்து தென்னகத்தின் சொத்து!

நெய்வேலி தரும் நிலக்கரி— 'கருப்புத் தங்கம' நிகரில்லா செல்வம்!

நெல்லூர் வட்டாரத்தில் தாமிரம் ஏராளமாகக் கிடைக்கிறது.

நீலகிரி வட்டாரங்களில்—மண்ணுக்கடியிலே பொன் — பாளம் பாளமாக அகப்படுகிறது.

மைகா கண்ணாடி செய்வதற்கான மூலப் பொருள், பலப் பல சர்க்கரை ஆலைகள் ஏற்படுத்துவதற்கான கன்னல் கொல்லைகள்; புகையிலை, தோல் பதனிடுவதற்கான சாதனங்கள், இன்னும் தேய்ந்து திசைமாறிப் போனவர்களுக்கு வாழ்வளிக்கக் கூடிய தொழிற் சாலைகளை உருவாக்குவதற்கான மூலப் பொருள்கள் சீலத் திருவிடத்தில் ஏராளமாகக் கிடைக்கின்றன.

இந்த மூலப் பொருள்கள் கிடைக்கின்ற பிரதேசங்களில் இதுவரை மூளியாகிக் கிடப்போரின் மனத்துயர் போக்க ஐந்தாண்டுத் திட்டத்தால் உருவான உருப்படியான தொழிற் கூடங்கள், ஆராய்ச்சி மனைகள் எத்தனை?

வற்றிப்போன ஆற்றுக்கு அணை கேட்க நாம் என்ன காமராசர்களாகவா இருக்கிறோம்?

வற்றிய பகுதிகள் கிடக்கட்டும்! வளம் கொழிக்கும் பகுதிகளில் என்ன சாதித்திருக்கிறது— சர்க்காரும்— அது 'சஞ்சீவி மூலிகை' என்று கருதிக் கிடக்கும் ஐந்தாண்டுத் திட்டமும்!

தென்னகத்தின் தொழிற் பசிக்கு ஐந்தாண்டுத் திட்டம் சோறு போட்ட இடம் எது? கூற முடியுமா காமராசரால்!

வடக்கும் தெற்கும்-சம கண்ணோட்டத்தோடுதான் கவனிக்கப்படுகிறதா?

'தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது'

'தென்னகத்திற்கு சம பங்கு கிடைக்கவில்லை'

'தென்னகத்திற்கு இன்னும் சற்று அதிகமான வசதிகளை மத்திய சர்க்கார் தரத்தான் வேண்டும்'—தேசீய முகாமிலேயே இப்படி முணகல் கேட்கிறதே!

காமராசரிடமிருந்து இதற்கெல்லாம் நியாயமான பதிலை எதிர்பார்க்க முடியாதுதான்.

'கோயபல்ஸ்' அடிச்சுவட்டை பின்பற்றி — குமுறும் இன உணர்வை அடக்கிவிட நினைக்கிறார்-பரிதாபத்துக் குரியவர்.

பொய் வதந்திகளைக் கிளப்பி, தான் இருக்கும் இடத்தின் 'பொறுப்பை'யும் மறந்துபோய்— பேச்சு மேடையிலே இவ்வளவு துணிவாக பொய்ப் பேசுவார் காமராசர் என்பதை யாரும் எதிர் பார்க்க முடியாதுதான்.

பொல்லாத தேர்தல்; பாவம்! அவரை இவ்வளவு கீழ் நிலைக்குக் கொண்டுவந்து நிறுத்தும் என்று நாமும் எதிர்பார்க்கவில்லை.

சிக்கலை அவிழ்க்க முடியாத நேரத்தில்—கயிற்றையே அறுதது விடு: என்பதுபோல காங்கிரஸ் சர்க்காரின் ஊழல்களையும்-பதவி நாற்காலிகளில் இடம் பிடித்துக் கொண்டார்கள்—எந்த பொது மக்களின் தயவால் அங்கு சென்றார்களோ—அதே பொது மக்களின் துயர் துடைக்க மார்க்கம் தேடாமல் சதைக் கொழிப்பேறிய சர்வாதிகாரிகளாக நடை போடுகிறார்கள்; என்று நாம் சான்றுகளோடு விளக்கும்போது—நம் கேள்விகளுக்கு நேரிய முறையில் பதில் சொல்லத் திராணியில்லாத தேசியத் தோழர்களும்— அவர்தம் முன்னோடி காமராசரும் இன்று கயிற்றையே அறுத்து விடத் துணிந்துவிட்டார்கள்!

பொது மேடைகளில் 'அரசியல் காசரீகத்தை' துணிந்து ஏலம் விடுகிறார்கள், ஒப்பற்ற ஒரு ஸ்தாபனத்தின் நிழலிலே வளர்ந்துவிட்ட இந்த மனிதர்கள்!

நீரில்லா ஆற்றுக்கா நாங்கள் அணை கேட்கிறோம்? காமராசரே! இன்னமும் சில கனவான்கள் உலவுகின்ற கூடாரத்தில் நடை போடும் விருதுநகராரே! தேசிய வீரரே! பச்சைத் தமிழரே! உண்மைதானா இது?

O

பேசு ஓவியம்

கறுப்பர்கள் தீண்டத்தகாதவர்கள்; ஒதுக்கி வை— என்ற கோஷம் வெள்ளைத் திமிங்கிலங்களால் எழுப்பப் பட்டு வரும் இந்த நேரத்திலேதான் ஆப்பிரிக்காவிலுள்ள கோல்டு கோஸ்ட்நாட்டிலே தோன்றியிருக்கிறது, இந்த இளம்பரிதி!

சமீபத்தில் அங்கு நடந்த தேர்தலிலே வெற்றிமாலை சூடியிருக்கிறார், டாக்டர் குவாமே!

ஆட்லி கூறினார்: பயங்கரவாதிகள் எனக் குற்றம் சாட்டப்பட்டு காராக்கிரகத்திலே அடைத்து வைக்கப் பட்டோர் பின்னர் காமன்வெல்த் நாட்டின் பிரதமர்களாக மாறியிருக்கிறார்கள்—என்று!

அதே கதைதான் கோல்டு கோஸ்டிலும்! பல ஆண்டுகள் வெஞ்சிறையிலே வாடியிருக்கிறார் டாக்டர் குவாமே!

அவரைச் சிலர் 'ஆப்பிரிக்காவின் நேரு' என்கிறார்கள்! ஆனால் டாக்டரோ நிச்சயம் நேருவைப்போல சர்வாதிகார நோக்கு கொண்டவரல்ல!

அன்னிய ஆதிக்கத்தை விரட்டி விட்டு ஒரு கட்சி ஆதிக்கத்தை நிலைநாட்ட நினைப்பவரல்ல— அவர்!

பேச்சுக்கும் செயலுக்கும் ஒற்றுமை இருக்க வேண்டும்—என்று நினைப்பவர் டாக்டர்! சுருங்கச் சொன்னால் நாகரிக நாக்கு படைத்தவர் அவர்—அவரே இன்று ஆப்பிரிக்காவில் கர்ஜனை புரியும் விடுதலைச் சிம்மம்!

பின் தங்கி விட்டார், பிரதமர்!

★ 2-ம் பக்கத் தொடர்ச்சி

டுமே அமைக்கப்பட்டிருக்கும் ஸ்தாபனம் அமெரிக்கா மறுத்ததால், மறுத்துவிட்டது நாசருக்கு! பாவம்; உலக பாங்கி யென்று வெட்கமில்லாமல் பெயர் வைத்துக் கொண்டிருக்கிறார்கள், 'அமெரிக்க பாங்கி' யென்று மாற்றி வைக்காமல்!

நாசரை மூக்கறுப்பது மட்டுமல்ல இந்த மறுப்பின் நோக்கம்—அவருடைய கழுத்தையே அறுக்க நினைத்தார்கள் அழுக்கு மனம் படைத்த ஏகாதிபத்ய இரத்த வெறியர்கள்!

அமெரிக்கா நிதி அளிக்காவிட்டால் நாசரால் அஸ்வான் அணைக்கட்டைக் கட்ட முடியாது; அஸ்வான் அணைக்கட்டு அமுலாகாவிட்டால் எகிப்து நாட்டிலே பாதிக்கப்பட்டவர்களது தொகை பெருகி வழியும். அது பெருகினால் நாசர் அமர்ந்திருக்கும் பதவி பீடம் ஆட்டம் கொடுக்கும்!

"நாசர் இருப்பதால்தான் பிற நாடுகள் உதவ மறுக்கின்றன. எனவே நாசர் போகட்டும்!"—என மக்கள் கூக்குரல் போடுவார்கள்; பிறகு நாசருடைய பலம் குறையும்—அந்தச் சமயம் பார்த்து 'ஆமாம் சாமி!' ஒருவரைப் பதவியில் அமர்த்திவிடலாம்—இதுதான் ஏகாதிபத்யவாதிகளின் திட்டம்!

பாவம்; அந்தத் திட்டத்தைத் திக்கிரையாக்கிவிட்டார், நாசர்!

நீர் உதவி செய்யாவிடில் எங்கள் வீட்டு அடுப்பில் பூனையா தூங்கும் — என்று கேட்பதைப்போல, சூயஸ் கால்வாய் கம்பெனியை தேசிய உடைமையாக்கி விட்டார்.

இந்திய அரசாங்கம் ரெயில் கம்பெனிகளைத் தேசிய மயமாக்கிற்று!

தனிப்பட்டோர் நடத்திய ஆகாய விமானக் கம்பெனியை தேசிய மயமாக்கிற்று!

சில மாதங்களுக்கு முன்பு இன்ஷூரன்ஸ் கம்பெனிகளைத் தேசிய மயமாக்கிற்று!

அதாவது அந்தந்தக் கம்பெனிகளுடைய முதலாளியாக அரசாங்கம் மாறிற்று. தனிப்பட்டோர் முதலாளியாகாமல் அரசாங்கமே முதலாளியாக மாறினால், அந்த லாபத்தொகை அரசாங்கத்தைச் சேரும். அந்த லாபத்தை வைத்து அரசாங்கம் வரிப்பளுவைக் குறைக்கலாம். அல்லது அந்தத் தொகையை வேறு நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்தலாம். இதுதான் தொழில்களைத் தேசிய மயமாக்குவதன் பின்னே ஒளிந்து கொண்டிருக்கும் தத்துவம்! பொதுவாக முதலாளிகளின் தொகைகுறையும், லாப வேட்டைக்காரர்கள் மறைவர்; நாட்டில் ஏழ்மை குறைய வழி ஏற்படும்!

—இதே முறைதான் எகிப்திலும் கடைபிடிக்கப் பட்டது. நாசர் அமெரிக்காவிடம் கேட்ட தொகை ஏழு கோடி டாலர்!

ஆனால் சூயஸ் கால்வாய் கம்பெனியை அரசாங்கம் மேற்கொண்டதன் மூலம் நாசருக்கு ஒரு ஆண்டில் கிடைக்கும் தொகை முப்பத்தைந்து லட்சம் டாலர்!

ஐந்து ஆண்டுகளில் கிடைக்கும் தொகை ஐம்பது கோடி டாலர்!

ஆமாம்; இனி கடன் தேவையில்லை; அமெரிக்காவிடம் அட்சய பாத்திரத்தை எடுத்துச் செல்ல வேண்டிய அவசியமில்லை; முதலைத் திருப்பித் தர வேண்டாம்; வட்டியும் செலுத்தத் தேவையில்லை; காரணம் சூயஸ் கால்வாய் கம்பெனி என்னு சுரங்கத்தைத் தோண்டி விட்டார், நாசர்! புதையல் கிடைத்து விட்டது; புது வாழ்வு மலர்ந்து விட்டது, எகிப்து மக்களுக்கு!

இந்த நல்ல காரியத்தை முன்பே செய்து முடித்திருக்கலாம்; அமெரிக்கா, பிரிட்டன், உலக பாங்கி—இவைகளை அணுகாமலேயே தேசிய மயமாக்கும் திட்டத்தை நிறைவேற்றியிருக்கலாம். பாவம்! நாசர் கால தாமதம் செய்து விட்டார்—என்று பலர் நினைக்கத்தான் செய்வர்.

ஆனால் ஏகாதிபத்திய நாடுகளோ ஒப்பாரி வைக்கின்றன. லண்டன், நியூயார்க், பாரிஸ் போன்ற நகரங்களிலே நாசர் ஏதோ அணுகுண்டுகளை வீசியதைப்போல அலறிச் சாகின்றன!

'சண்டே எக்ஸ்பிரஸ்' என்னும் பத்திரிகை "துருப்புகளை அனுப்பி நாசரை தூக்கி யெறியுங்கள்!"—என்று ஆங்கில அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

"சூயஸ் கால்வாய் நாசரின் கைக்கு வந்து விட்டால் ஆங்கில மக்களின் தினசரி வாழ்க்கையும் நாசரின் கைக்குள்ளே வந்து விட்டதாக அர்த்தம். உங்கள் வீடு, வாசல், அலுவலகம், தொழிற்சாலை எல்லாவற்றையும் கட்டுப்படுத்தும் கருவி நாசரிடம் இருப்பதாக அர்த்தம்"

—இவ்வளவு ஆத்திரமான கட்டுரையை எழுதியிருக்கிறார் கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர், ஒருவர்!

வேறு ஒருவனுடைய நாட்டிலே யாரோ கால்வாயைத் தோண்டுவார்களாம்; அதற்கு இவர்கள் உரிமை கொண்டாடுவார்களாம்; பிறகு உரியவன் அதை எடுத்துக்கொண்டால் உறுமுவார்களாம் — இதுதான் ஆங்கிலேயர்கள் பேசுகின்ற நியாய வாதம்!

தொழில்களைத் தேசிய மயமாக்குதல்—என்னும் கொள்கைக்கு வலிவு தேடிக் கொடுத்தவர்கள், இங்கிலாந்தின் தொழிற் கட்சிக்காரர்கள்!

இப்போது அவர்கள்கூட தங்கள் கொள்கையை மறந்துவிட்டு, ஏகாதிபத்திய வெறியர்களாக மாறி, கூக்குரல் எழுப்புகின்றனர்!

இவர்களுடைய மிரட்டல் மொழிக்கும், உருட்டு விழிக்கும் சிறிதும் அஞ்சவில்லை, எகிப்தின் தலைவர் நாசர்!

இம்பீரியல் பாங்கியை இந்திய அரசாங்கம் எடுத்துக் கொண்டமைக்காக பிரிட்டனோ, அமெரிக்காவோ கண்டனக் கணைகளை வீசினால் அதில் விவேகம் இருப்பதாகக் கருத முடியுமா?

அதனால்தான் சிறிதும் அசைந்து கொடுக்காமலிருக்கிறார், நாசர்!—

நியாயம் இவர் பக்கத்திலேயிருக்கிறது! உலகத்தின் பல மூலைகளிலுமுள்ள நல்லவர்களின் வாழ்த்து துணை நிற்கிறது! பல ஆண்டுகள் விழுந்து கிடந்து இப்போது எழுந்து நிற்கும் ஆசியா அவருக்குப் பல்லாண்டு கூறுகிறது. எனவே இமயம்போலிருக்கிறார், நாசர்!

சூயஸ் கால்வாய் ஏகாதிபத்யத் திருடர்களிடமிருந்து பிடுங்கப்பட்டது—என்ற செய்தியைத் தேனாகப் பருகி, மானைத், துள்ளி ஆடினார்கள் எகிப்திய மக்கள்! அவர்களோடு எழுச்சியுகம்காணத் துடிக்கும் ஆசியர்களும் ஆனந்த கூத்தாடினார்கள்!

ஆசியாவே ஆனந்தப் பள்ளு பாடியது. ரஷ்யா, கிழக்கு ஐரோப்பிய நாடுகள், யுகோஸ்லாவியா, கிரீஸ் போன்ற பல நாடுகளும், நாசரின் முயற்சிக்கு வரவேற்பு கொடுத்தன.

ஆனால் நாசரின் நண்பர் என்று கருதப்படுகிற இந்தியாவும், அதன் பிரதமர் பண்டித நேருவும் பல நாட்கள் மௌனமாயிருந்துவிட்டு ஆகஸ்ட் 2-ம் தேதிதான் வாயை அசைத்திருக்கிறார்.

'இந்து' பத்திரிகையின் டெல்லி நிருபர் எழுதுகிறார்: "எங்கு பார்த்தாலும் ஒரே ஆரவாரம் நிரம்பியிருக்கும் இந்த நேரத்தில் அபிப்பிராயம் தெரிவிப்பது நல்லதாகாது; நல்ல முடிவு ஏற்படுவதற்கு உதவி செய்யாது என இங்கு உணரப் படுகிறது." என்று!

சூடான், லிபியா உள்ளிட்ட சின்னஞ்சிறு நாடுகள் எகிப்திலிருந்து ஏகாதிபத்தியத்தை உதைத்தெறிந்த நாசருக்கு ஆதரவு காட்டியிருக்கின்றன.

ஆனால் ஆசியாவின் ஜோதியோ தயங்குகிறார்; நடுங்குகிறார்!

காரணம், அவர் அமெரிக்காவின் செல்லப்பிள்ளை! 'காமன் வெல்த்' என்று வெள்ளையன் நலம் பாடும் அமைப்பிற்கு அடிமை! அதனால்தான் அவருக்கு நா எழவில்லை நாசரை ஆதரிப்பதற்கு!

ஆசியாவிலே புது அத்தியாயம் எழுதப் படுகிறது; புரட்டுக்காரர்கள் பின்னங்கால் பிடரியில் அடிபட விரட்டியடிக்கப் படுகின்றனர். இதற்கு முதல் ஆதரவு மொழிகளை உதிர்க்க முடியவில்லை, முற்போக்கு வாதிகளின் முதல்வர் எனச் சொல்லப்படுகிற ஒருவரால்! அதுமட்டுமா? எல்லோருக்கும் முன்பாக அதட்டிக் கேட்கவும் முடியவில்லை புதிய ஆசியாவின் தலைமைப் பதவிக்கு ஆசைப்படும் அவரால்!

முன்பு அமெரிக்கா அணு ஆயுதங்களைச் சோதனை செய்ய முயன்றபோது அதைத் தடை செய்யுங்கள்—என்று அவசர அவசரமாக வானொலியிலே பேசினார். அந்த ஆரவாரம்கூட இன்று காணோம்.

அவ்வளவு ஏன்; செல்லாக் காசாகி விட்ட ஆச்சாரியார்கூட நாசருடைய செயலுக்கு உடனடியாக ஆதரவு தெரிவித்தார். அந்தத் துணிவுகூட பண்டிதருக்கு வரவில்லை.

—இப்படியெல்லாம் இருள் சூழப்பட்டவரையோ ஜோதி என்று அழைப்பது? கூடாது; கூடாது.

ஆசியாவின் சுதந்தர ஜோதியாகப் பிரகாசிக்கும் தன்மை அவருக்குச் சிறிதளவும் கிடையாது.

உள்நாட்டு முதலாளிகளைக் கண்டே அஞ்சி நடுங்குகிறார், அவர்! அத்தகைய கோழை மனம் கொண்டவர் எப்படி அமெரிக்க டாலர் சீமான்களையோ, பிரிட்டன் துரைமார்களையோ பகைத்துக் கொள்ள முடியும்?

அவர் ஆசியாவின் ஜோதியல்ல; ஆளை மயக்குவதற்குப் புரட்சி வேஷம் போட்டு மினுமினுக்கும் மின்மினிப் பூச்சி!

அவர் ஏகாதிபத்ய எதிர்ப்புக் களத்தின் முன்னணி வீரரல்ல; எல்லோரிடமும் நல்ல பெயர் வாங்க வேண்டுமெனக் கருதி, பொங்கி எழவேண்டிய நேரத்தில் பூனையைப்போல் பதுங்கிக் கொள்ளும் பிற்போக்குவாதி!

சூயஸ் கால்வாய் எழுப்பியிருக்கும் பிரச்சினை இதைத்தான் உணர்த்துகிறது!

தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றங் கருதி திருச்சியிலிருந்து
1-9-56 முதல் வெளிவருகிறது
"விடுதலை முரசு"
(மாத மிருமுறை தமிழ் வெளியீடு)
ஆசிரியர்: எஸ். சிங்காரம்
எல்லா ஊர்களிலும் விற்பனையாளர்கள் தேவை
விபரங்களுக்கு: 'விடுதலை முரசு' காரியாலயம்
தேவதானம் தெப்பக்குளம்—திருச்சி.

நம்பிக்கை!

அந்த முதுக் கிழவி ஒரு புதிரானவள்—அவளது நடவடிக்கைகளும் மர்மமாகத்தான் இருந்தன. ஆனால் அவளைப் பற்றி ஒரு சிறிதும் அக்கரை எடுத்துக் கொள்ளாதவர்கள் போல் ஊர் மக்கள் நடந்து கொண்டார்கள். அது மட்டுமல்ல; சிலர் அவள் பக்கம் திரும்பியும் பார்ப்பதில்லை; பேசுவதும் இல்லை! அந்த அளவுக்கு அவள் செய்த குற்றம் தான் என்னவாக இருக்கும்?

—ஊருக்கு புதிதாக வந்த போலீஸ் இன்ஸ்பெக்டரின் மகன் தேவனின் உள்ளத்தில் இந்தக் கேள்வி பெரும் பிரச்சினையாக இருந்தது.

இது பற்றி அவன் ரத்தினத்தைக் கேட்டும் விட்டான். ரத்தினத்தை யார் என்று சொல்லவில்லையே; அவர் ஊர் பிரமுகர்களில் ஒருவர். ஊருக்கு புதியவர் யார் வந்தாலும் தானே முன்னாலே போய் அறிமுகம் செய்து கொள்வார்; ஆவன செய்து தருவார். 'நல்லவர்' என்று மற்றவர்கள் தன்னைப் புகழ வேண்டும்—இப்படி ஆசை அவருக்கு! அந்த ஆசைக்கு பக்கபலமாக இருந்து வந்தன அவரது 'சர்க்கரைப் பேச்சு'ம், வலுக்கட்டாயமாக வரவழைக்கப்படும் அசட்டுச் சிரிப்பும்!

"என்னங்க சார்! ஊர்க் கோடியிலே ஒரு ஓட்டைக் குடிசை இருக்கிறதே—அங்கே இருப்பது யார்?..." என்று அவரைக் கேட்டான் தேவன்.

"தம்பீ!...தம்பீ!...தப்பித் தவறி அந்தப் பக்கம் போயிடாதீங்க...கையிலே கழுத்திலே கிடக்கிறதைக் கழட்டிக்கிட்டு விட்டுடுவா அந்தக் கிழவி!..." என்றார் அவர்.

"என்ன?..."

"ஆமாம் தம்பீ! அவளோட மகன் ஜெயில்ல இருக்கான்—திருடன்! அவளும் திருடி!... நீங்க ஜாக்கிரதையா இருங்க... அப்படி ஏதாவது தப்பித் தவறி நடந்துட்டா நான் இருக்கேன் ...பார்த்துக்கறேன்..." என்றார் ரத்தினம்.

திருடியா?-தேவன் அதிர்ச்சி அடைந்தான். ஓடாய்த் தேய்ந்து போன உடல்; எனினும் மாடாய் உழைக்கிறாள்; மரம் வெட்டுகிறாள்; மண் வெட்டி பிடித்து தோட்ட வேலை செய்கிறாள்; மாடோட்டி செல்லுகிறாள்; வீடு பெருக்கி வியர்வை சொட்ட பாடுபடுகிறாள். பகலில் மட்டுமல்ல; இரவில்கூட அந்த கிழத்தாயின் கைகள் ஓய்வதில்லையே! இயந்திரமா என்ற சந்தேகம் ஒரு பக்கம்; ஏன் இந்த உழைப்பு என்ற கேள்வி மறுபக்கம்; இருபது வயது வாலிபனுக்கும் இல்லாத பலம் அவளுக்கு மட்டும் எப்படி வந்தது? ஊரோடு ஒத்து வாழாமல், தனி உலகம் அமைத்துக் கொண்டவளைப்போல் நடந்து கொள்கிறாளே, ஏன்?—இப்படி எண்ணற்ற வினாக்கள் எழுப்புகின்றனவே, அவளைப் பார்த்தால்! அவளா திருடி? என்ன புதிர் இது—தேவன் குழம்பியே போனான்.

உச்சி வெய்யிலையும் பொருட்படுத்தாது சாலையோர தோப்பொன்றில் சுள்ளிகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தாள் அந்தக் கிழவி! எதிரில் வந்து நின்ற தேவனைக்கூட அவள் கவனிக்கவில்லை.

"பாட்டி..." என்றான் தேவன்.

நிமிர்ந்து பார்த்தாள். கண்களில் பார்வையும் குறைந்து விட்டது போலும்; தேவன் நிற்பதைப் புரிந்துகொள்ள சிறிது நேரம் ஆயிற்று!

"யாரப்பா? என்ன வேண்டும்?" என்று கேட்டாள். குரலில் தெம்பேயில்லை; எப்படியிருக்கும்? வயது எழுபது இருக்குமே!

"பாட்டி...!ஒண்ணே ஒண்ணு கேட்கிறேன்... கோபிச்சுக்காம பதில் சொல்லுவியா... ஆமா, நீ இப்படி இருபத்து நாலு மணி நேரமும் வேலை செய்துக்கிட்டிருக்கியே ஏன் பாட்டி? ... ..."—வெய்யலின் கொடுமையால் தரை கொதித்தது. நிற்கவே முடியவில்லை தேவனால்.

"எதற்கா? என் மகனுக்காக! ஆயிரம் ரூபாய் கேட்டாரே வக்கீல்..."

ஒன்றுமே புரியவில்லை தேவனுக்கு!

"காலணா காலணாவா சேர்த்தேன் தம்பி...ஒரு ரூபாயா; இரண்டு ரூபாயா? ஆயிரம் ரூபாய்கள் சேர்த்துட்டேன்! ...ஒருபாவமும் அறியாதவன் தம்பி என் மவன்! அவனை ஜெயில்ல தள்ளிட்டாங்க!..."

சுள்ளிக் கட்டைத் தூக்கி தலையில் வைத்துக் கொண்டாள். தள்ளாடித் தள்ளாடி நடந்து கொண்டே பேசினாள்:

"தம்பீ!......ஐந்து வருஷத்துக்கு முன்னாலே என் மகனை போலீசிலே புடுச்சிக் கொடுத்துட்டாரு, இந்த ஊரிலே இருக்கிறாரே, அந்த ரத்தின முதலாளி! என் மகன் அவரு வீட்டில் தான் வேலை செய்துக் கிட்டிருந்தான். நல்ல பையன் தம்பீ......உன்னைவிடச் சின்னவன்...அவனைத் திருடன்னு சொல்ல எப்படி மனசு வந்துதோ!..."

கிழவியின் ஒளியிழந்த கண்களில் நீர் துளித்தது.

"...ஊர் சின்ன பண்ணைக்காரு வீட்டில் திருட்டுப் போயிட்டுது... ஒரே களேபரம்; போலீசெல்லாம் வந்தது! திருட்டுப் போன வெங்கலப் பாத்திரங்களில் ஒண்ணு ரத்ன முதலாளி வீட்ல இருந்துட்டு. ஆனால்...அவரோ, 'எனக்கும் அதுக்கும் சம்பந்தமில்லை; என் வீட்டு வேலைக்காரப் பையன் தான் கொண்டு வந்துட்டான்' —அப்படீன்னு சொல்லிட்டாரு!...தம்பி!...என் மகனைப் போலீஸ் புடுச்சுக் கிட்டுப் பொயிட்டு...நான் அழுதேன்; புலம்பினேன்; எனக்கு யாருமில்லே......என்ன செய்யிறது?...என் மவனை விடுதலை செஞ்சி கொடுங்கன்னு பக்கத்துடவுன் வக்கீல் ஐயா கிட்டே சொன்னேன்; காலைப் பிடிச்சு அழுதேன். 'என்னமோ 'பீஸா'மே—'ஆயிரம் ரூபாய் கொண்டா கோர்ட்டிலே வாதாடி உன் மவனை மீட்டுத் தர்றேன்'னுட்டாரு!"

அவள் குரல் மங்கிவிட்டது, விம்மி விம்மி அழுதாள்.

"அதுக்குத்தான் தம்பி இப்படி உழைக்கிறேன்! காலணா காலணாவா ஆயிரம் ரூபாய் சேர்த்துட்டேன், ஐந்து வருஷத்திலே!...அப்பப்பா!......நான் பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல; பசி—பட்டினி..."

காலில் ஏதோ மோதிவிடவே சுள்ளிக் கட்டுடன் கீழே விழுந்தாள். தேவன் மெதுவாக அவளைத் தூக்கிவிட்டான்.

"இந்தக் கஷ்ட மெல்லாம் இனிமே எனக்கு ஏன் வரப் போவுது? ஆயிரம் ரூபாயைக் கொண்டு போய் வக்கீலுக் கிட்டே கொடுத்துடுவேன். என் மவன் திருடனில்லைன்னு வெளியே வந்துடுவான்... அவனை அஞ்சு வருஷமாச்சு பாத்து! இப்போ நல்லா வளந்திருப்பான்; அழகாவும் இருப்பான்; என்னைக் கண்டதும் 'ஐயோ! அம்மா!'ன்னு ஓடியாந்து கட்டிப் புடுச்சுக்குவான்; அழுவான். நான் அவன் கண்ணீரைத் தொடைப்பேன்! ஆமாம்; தொடைப்பேன்! ஏன் அழணும்? எனக்கு அவன் கிடைச்சுட்டான்; நான் அவனுக்குக் கிடைச்சுட்டேன்; அப்புறம் அழலாமா தம்பி!...?"

என்றாள் கிழவி. இப்போது அவள் முகத்திலே சிரிப்பு தோன்றியது. மகன் கிடைத்து விட்டதைப் போலவே அவள் நினைத்து விட்டாள் போலும்!

***

அவிழ்க்க முடியாது கிடந்த சிக்கலை விடுவித்து விட்டதைப் போல தேவன் வீட்டுக்குப் போனான்.

அங்கே அவனது அப்பா முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க நின்று கொண்டிருந்தார். எதிரே கைகட்டி நின்ற போலீஸ் ஐவான்களைப் பார்த்து 'உறுமி'க் கொண்டிருந்தார்.

"போங்கள்! எல்லா இடத்திலும்தேடுங்கள்! நல்லவன்; கெட்டவன்—பணக்காரன்; ஏழை—எவன் வீட்டையும் பாக்கி விட வேண்டாம்...ம்...போங்கள்..."—என்று விரட்டினார். பக்கத்தில் நின்று கொண்டிருந்தார் ரத்தினம்

தேவனுக்கு விபரம் எதுவும் புரியவில்லை; பேசாமல் உள்ளே நழுவி விட்டான். வழக்கம் போல் நேரே அம்மாவிடம் போய் கேட்டான்.

ரத்தினத்தின் வீட்டுப் பெட்டியில் இருந்த ஆயிரம் ரூபாய் பணம் நேற்று இரவு காணாமல் போய்விட்டதென்று தகவல் கிடைத்தது.

***

மறுநாள் பொழுது விடிந்தது.

படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான் தேவன்.

"ஐயோ! ஐயோ!" என்ற அலறல் கேட்டது. திடுக்கிட்டு எழுந்தான். ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான். ஊர்க் கோடி குடிசைக்காரியான அந்தக் கிழவியை பர பர வென்று இழுத்துக்கொண்டு சென்றார்கள் இரண்டு போலீஸ்காரர்கள்!

"இந்த ஊரிலே கிழங்கள் கூட திருடுதுகளே! நல்லவேளை ரத்னம் மட்டும் 'க்ளு' கொடுக்கல்லேன்னா நான் அவமேல சந்தேகப்பட்டிருக்கவே மாட்டேன்!" என்று அப்போது அம்மாவிடம் சொல்லிக்கொண்டிருந்தார் அப்பா!

தேவன் வெளியே ஓடினான்.

மகனுக்காகக் காத்துக்கிடந்த மாதா—ஆயிரம் ரூபாய்கள் சேர்த்த அந்த அபாக்கியத்தாய்—உழைத்து உடுமாறிய முதுமைக் கிழவி—அலறிக் கொண்டே போனாள், "ஐய்யோ! மகனே! மகனே!" என்று குறுகி, கூன் விழுந்து, 'கேள்விக் குறி'போல் வளைந்து போன அவளது வத்தல் உடல், "அடுக்குமா இந்த அநீதி?" என்று கேட்பதைப்போல இருந்தது!

மகன் கிடைத்து விடுவான் என்ற அவளது 'நம்பிக்கை'யை நச்சுச் செய்கைகளுக்கு 'நல்லவன்' என்ற திரைபோட்டுக் கொண்டிருந்த ரத்தினம் விழுங்கி விட்டான். ஆமாம்; உழைக்காமல் தான் பெறப் போகும் ஆயிர ரூபாயை எண்ணி சிரித்துக் கொண்டிருந்தான் அப்போது!—**சொர்ணம்**



ஏ. கே. எஸ். மணியன் ; அக்கார பாளையம்.

(?) காங்கிரசின் தலைவர்கள் எல்லோரும் வக்கீல்களாயிருக்கக் காரணம்என்ன?

வக்கீல் தொழிலைவிட 'காங்கிரஸ் வாதி'த் தொழில் லாபகரமாக யிருப்பதால்தான!

(?) இவ்வுலகில் கடன் படாமல் வாழ்பவர்கள் யாராவது உண்டா?

தேர்தல் மட்டும் வராமலிருந்தால் பல தேசியத் தோழர்கள் அப்படி இருந்திருப்பார்கள்!

ஏ. ஆறுமுகம் ; இலுப்பக்குடி.

(?) நாணயம்—யாருக்குத் தேவை?

நாணயம் — யோக்கியமானவர்களுக்கும், 'நாயம்' காமராசர் போன்ற பொறுப்புள்ளவர்களுக்கும் தேவை!

பா. நடராசன் ; கோவை.

(?) ஓய் எழுத்தாணியாரே! இந்திய நாட்டிலே தற்போது மிகப் பெரிய அணைக்கட்டு எது?

நேருவுடைய உதடுகள் தான்! அந்த அணைக்கட்டு' திறந்தால் பக்ராநங்கலைவிடப் பெரிய அளவக்கு 'வார்த்தை வெள்ளம்' வெளிவரும்!

ஆ. தேவஅரசன் ; பம்பாய்.

(?) முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மக்கள் தாம் பெற்ற குழந்தைகளை விற்றார்கள்: இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எதை விற்பார்கள்?

சிறிது முன் யோசனையுள்ளவர்களாயிருந்தால் வருகிற தேர்தலின் போது எதையும் 'விற்காமலிருக்க' அவர்களே முடிவு செய்துகொள்வார்கள்.

சோ. கற்பகம் ; காளாப்பூர்.

(?) காலப்போக்கில் அழியாதது எது?

கல்லவன் என்ற புகழ்!

வ. சீனுவாசன் ; பரங்கிமலை.

(?) புயலை எதிர்க்க முடியுமா?

முடியாது; அதனால்தான் தேஷ்முக் குடைய குற்றச் சாட்டுகளுக்கு தக்க பதில் கூறாமல் இருந்து விட்டார், பண்டிதர்!

தி. வையாபுரி ; சிவியாம்பாளையம்.

(?) ஆச்சாரியாரின் அடுத்த திட்டம் என்ன?

சட்ட சபையின் கோல்லைப்பறக் கதவைத் தட்டிப் பார்க்கும் திட்டம்தான்!

முத்தழகன் ; தாம்பரம்.

(?) இந்தத் தேர்தலில் வாகை சூடி நீங்கள் மந்திரிசபை அமைப்பீர்களா?

மந்திரிசபை அமைக்கிற அளவுக்கு 'பெரும்பான்மை' பெறாவிட்டாலும், நிச்சயமாக மந்திரிகளை ஆடவைப்போம்!

ஆளுடையப்பன் ; இலஞ்சி.

(?) தி. மு. கழகத்தவர் ஊருக்கு ஒருவர்தான் இருப்பதாகக் கூறுகிறாரே, காமராசர்!

ஆமாம்; வற்றாத ஜீவ' தி ஊருக்கு ஒன்று இருந்தால் போதாதா?

சாம்பசிவம் நே ; அவிசாவெல்ல.

(?) எல்லோரும் திருக்குற்றாலம் போகிறார்களே; அங்கு என்ன முக்கியம்?

அங்கே கோயில் கொண்டிருக்கும் குற்றாலநாதனைத் தவிர எல்லோரும் அருவியிலே குளித்து சுகம் பெறுகிறார்கள்!

கு. இரா, பரமசிவன் ; காரமடை.

(?) எட்டணா கொடுத்து கோவிலுக்கு அர்ச்சனை செய்வதற்கும், எட்டணா கொடுத்து தி. மு. க. வில் அங்கத்தினராவதற்கும் என்ன வித்தியாசம்?

அர்ச்சனை செய்வதால் மூடனாகிறீர்; தி. மு. க. வில் உறுப்பினராவதால் நீர் விடுதலை வீரனாகிறீர்!

(?) ஏழைகளைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்—என்று காமராசர் ஏன் பேசுகிறார்?

தங்களால் முடியாது என்பதை ஒப்புக்கொள்கிறார்; அவ்வளவு தான்!

(?) மகாபாரதப் புத்தக விழா நேரு தலைமையில் நடப்பதேன்?

பஞ்ச சீலத்துக்கும் 'பாஞ்சாலி சீலத்து க்'கும் தொடர்பிருக்கிறதோ, என்னவோ!

ஆகஸ்ட் 7-ம் நாள் விற்பனைக்குக் கிடைக்கும்

இது ஒரு இலக்கியக் கருவூலம்!
சிறுகதைச் செல்வம் ;
சிந்தனைச் சித்திரம் – எனச்
சொல்லத் தக்க செந்தமிழ் மாத ஏடு

மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன், இரே. இளம்வழுதி, கவிஞர் வாணிதாசன், டைரக்டர் காசிலிங்கம், முல்லை சத்தி, சருணனந்தம் முதலியோரின் கற்கண்டு நிகர் எழுத்தோவியங்கள் நிரம்பிய நிறைமதி நிகர் ஏடு.



டாக்டர் அ. சிதம்பரநாதன், சிற்றரசு, பி. சி. கணேசன் ஆகியோரின் அழகுக் கட்டுரைகள் கொண்ட கவின்மிகு ஏடு.



உள்ளம் உருக்கும் மொழிபெயர்ப்புக் கதைகள் ;
உவகை தரும் கேலிச் சித்திரங்கள் ;
கற்பனைக்கு விருந்தளிக்கும் துணுக்குகள் ;
ஓவியங்கள் நிறைந்த காவியத் தொகுப்பு



★ 'பிரேதமனிதன்' — பெயர் பெற்ற ஆங்கில நாவல் மெருகு கலையாமல் 'சித்திரத் தொடர் கதை'யாய்த் துவங்குகிறது!

★ 'இரு நகரக் கதை'—சார்லஸ் டிக்கன்சின் அவனி போற்றும் பெருங்கதைப் புத்தகம் நல்ல தமிழ் நடையில் சுருக்கித் தரப்படுகிறது!

இன்னும் பல சிறப்புகளுடன் பல்சுவை அமுதாய், பலாவின் சுளையாய் உங்களை மகிழ்விக்கப் போகிறது முத்தாரம்!

விலை அணு 8.

இன்றே உங்கள் பிரதிக்கு விற்பனையாளர்களிடம் சொல்லிவையுங்கள்!

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ட் ரோடு சென்னை-6.